பதினெண் சித்தர் பீடாதிபதிகள் வழங்கிய
அருளூறு அமுத தெய்வீச் செந்தமிழில் உள்ள

# காயந்திரி மந்திரங்கள்



ஓம் ஐம்புலன்களம் வாணவாழும் பதினோறாவது பதிணென் சித்தர்
பீடாதிபதி, இந்துமதத்ததந்தை, தத்துவநாயகம், அருளாட்சி நாயகம்,
தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய அண்டபேரண்ட அருட்பேரரசர்,
குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர்

## தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூறார்

### காலம் கி.பி 785 - 1040

பொறுப்புத் துறப்பு :
உசாத்துணை : சி. சிறீரஞ்சன் ஐயா
இப்புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களின் துல்லியத்தன்மைக்கு
மறுபதிப்பு செய்யும் நாம் பொறுப்பேற்கமாட்டோம்.
விபரங்களுக்கு : +94 77 187 9195 அழைக்கவும்.

அறிக்கை எண் : 107 இந்துமத ஆண்டு : 43.73,114 காலம் ஏப்ரல் : 2013



இளமுறியாக் கண்டத்து கன்னியாகுமரி

பகலவதி [பகவதி]

# முன்னுரை

## 10வது பதினெண் சித்தர் பீடாதிபதி<br>குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர்<br>தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூறார்<br>அவர்களின் குரு பாரம்பரிய வாசகத்திலிருந்து.....

**இந்து மதம் என்பது வெறும் வரலாறு மட்டுமல்ல! கதைகளை மட்டும் கொண்டதல்ல! அற்புதங்களைச் செய்த சித்து விளையாடல்காரர்களால் உருவாக்கப்பட்டதல்ல! நரகத்தைக் காட்டி அச்சுறுத்தியும், சொர்க்கத்தைக் காட்டி இச்சுறுத்தியும், பிறந்ததல்ல! வளர்ந்ததல்ல! வாழ்ந்ததல்ல! புரியாத மொழிகளில் தெரியாதவைகளைக் கூறி மக்களைக் குருடாக்கிடும் பணியில் ஈடுபட்டதல்ல! மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. எந்தஒரு தனிப்பட் கடவுளையோ, கோயிலையோ புகழ்ந்து வாழுவதல்ல! வளருவதல்ல! அது முழுக்க முழுக்க தத்துவங்களையும், தத்துவ ஞானிகளையும், சித்தாங்களையும் சித்தாந்திகளையும், வேதங்களையும் வேதாந்திகளையும், விஞ்ஞானங்களையும் விஞ்ஞானிகளையும், கலைகளையும் கலைஞர்களையும் கோயில்களையும் கோவில் விஞ்ஞானங்களையும், இவற்றிற்கெல்லாம் மேலான கணக்கற்ற கோடிக்கணக்கான தேவர்கள், தேவியர்கள், தேவதைகள், கடவுள்கள், தெய்வங்கள், ஆண்டவர்கள், பட்டவர்கள், அல்லாக்கள், எல்லாக்கள், இயவுள்கள், இறைவர்கள்... என்று பட்டியலிடமுடியாத அருளுலகத்தவர்களை வகை வகையாகக் கொண்டு 1359 அண்டங்களிலும் பரவியிருப்பதுதான் இந்துமதம்.**

**அதாவது ஏட்டறிவின் மூலம் மட்டும் இந்துமதத்தை அறிந்துகொள்ள முடியாது! முடியாது!! முடியவே முடியாது!!! குரு வழியாகப் பெறக்கூடிய பட்டறிவாலும், தானே பெறக்கூடிய பயிற்சிகளாலும்தான் இந்துமதத்தைப் படிப்படியாக உணரமுடியும்! உணரமுடியும்!! உணரவேமுடியும்!!!**

**- தத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூறார்**

# 12வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் எழுதிய நூல்களிலிருந்து.....

உலக அரங்கில் இத்தாய் திருநாடே ஆன்மீகத் துறையில், மத வரலாற்றில் முதன்மையும், தலைமையும் பெறுதற்குரியது. இந்நிலை சித்தர்கள் காலங்காலமாக காடுகளிலும், கானாற்றங்கரைகளிலும், காரிருள் சூழ்ந்த குகைகளிலும் கண்மூடிய நிலையில் கருத்தை உள்ளடக்கி வாழ்ந்திட்ட காரணத்தால் உலகுக்குக் புலப்படாமல் போயிற்று. மேலும் சித்தன் போக்கு சிவன் போக்கு என்று சித்தர்கள் பிறரை எண்ணாமல் வாழ்ந்ததால் தமிழர்கள் தன் செயல்திட்டமும், பயன் மிகுதியுடைய சமயம், கடவுட் கலைகள், தெய்வீக ஆற்றல் முதலியவை தமிழரின் வீழ்ச்சிக்காகவோ எழுச்சிக்காகவோ செழிப்புக்காகவோ பயன்படாமல் போயின. இனி அந்நிலை இல்லை.

மனித இனம் இன்று மின்விசை, காந்தம், நிலக்கரி, பெட்ரோல் முதலிய சக்திகளைப் பயன்படுத்துவது போல் விரைவில் தெய்வீகச் சக்தியையும் பயன்படுத்தி செழிப்பும் மகிழ்ச்சியும் மிக்க வாழ்வினைப் பெறும். அப்பொற்காலத்தை உருவாக்குவதே என் பணி.

பதினெண் சித்தர்கள் காலம் இம் மண்ணுலகுக்கும் முந்திய ஒன்றாகும். அதாவது விண்வெளியில் உள்ள சூரியனின் சிதைவு நெருப்புக் கோளமாக சுழன்று பனிக்கட்டியாக, நீராக மாறிப் பின் நிலங்கள் தோன்றிப் பயிரினங்களும், உயிரினங்களும் பிறந்தன என்ற இம் மண்ணுலக வாழ்க்கை வரலாற்றையே எழுதும் மூத்தவர்கள் தான் பதினெண் சித்தர்கள். இவர்கள் சிறந்த விண்வெளி ஆய்வுப் பயண வீரர்கள். எனவே இவர்களையும் இவர்களின் அறிவியல் சாதனைகளையும் அருளுலக கொடைகளையும் விவரித்தல் எளிதல்ல! எளிதல்ல!! எளிதே அல்ல!!!

– குருமகா சந்நிதானம், அரசயோகிக் கருவூறார்.

குறிப்பு :

அருளுலகத்தில் பலருக்குரிய காயந்திரிகள் இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவரவர் ஆர்வத்துக்கும், வசதி, வாய்ப்புக்கும் ஏற்ப ஒன்றன்பின் ஒன்றாகக் கற்றுக் கொள்ளலாம். அல்லது அவரவருக்கு விருப்பமான எந்த ஒரு கடவுளுக்குரிய காயந்திரியை மட்டும் தேர்ந்தெடுத்து வீட்டில் அன்றாட பூசையில் காலை அல்லது மாலை கடவுளரின் படத்திற்கு முன்பு குறைந்தது 8 முறையாவது ஓதி வரலாம். குறிப்பிட்ட கடவுளரின் கருவறைக்கு (கோயிலுக்கு) செல்லும்போது அந்தந்த கருவறை மூலவர்க்குரிய காயந்திரியைக் குறைந்தது எட்டு முறையாவது கட்டாயம் கூற வேண்டும்.

காயந்திரியை ஒவ்வொரு நாளும் ஓதுவதற்கும் பலன் உண்டு. ஓதமுடியாமல் போகின்ற நாட்களுக்கும் சேர்த்து வாய்ப்பு கிடைக்கும் நேரத்தில் முன்கூட்டியோ அல்லது பின்நாளிலோ ஓதிடலாம். காயந்திரியை ஒரு நாளில் எந்த அளவு அதிக எண்ணிக்கையில்

(குறைந்தது 108 தடவை) ஓதி வருகிறார்களோ அந்த அளவிற்கு ஆவி, ஆன்மா ஆருயிர் நலம், உடல் நலம், உளநலம், உலகியல் நலங்கள், குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராம தேவர்-தேவதை, நாட்டுக் கடவுள்களின் அருளாசியும், திருவருளும், குருவருளும், பொருளுலக பாதுகாப்பும் கிட்டும்.

கலச பூசை :

பதினெண் சித்தர்களின் பூசை நூல்கள் (48) நாற்பத்தெட்டிலும், பொதுவாக கூறப்பட்டுள்ள விதிகளின் படியும் யார் எந்த கடவுளை பூசை செய்தாலும் ஒரு மண்கலயத்திலோ, பித்தளைச் செம்பு கலயத்திலோ, மஞ்சள்நீர் ஊற்றி, மாவிலை, வேப்பிலை, அரச இலை, ஆலிலை இவற்றில் கிடைப்பனவற்றை கலசத்திற்குள் (இலைகள் சிறிது வெளியே தெரியுமாறு) வைத்து, கலசத்தை வீட்டில் பூசை செய்யும் இடத்தில் வைத்து காயந்திரி மந்திரங்களை அன்றாடம் ஓதிவர வேண்டும்.

சாப்பிடுவதற்குரிய உணவுப் பொருட்களை கலசத்திற்கு முன்பு படையலாகப் படைக்க வேண்டும். திருநீறு, குங்குமம், அருகில் வைக்க வேண்டும். காயந்திரி மந்திரங்களை குறைந்தது 8 முதல் 48 முறை ஓதவேண்டும். மஞ்சள் நீரை வீடு முழுவதும் தெளிக்கவேண்டும். வீட்டில் உள்ளவர்களும் தெளித்துக் கொள்ளலாம்.

சந்தியா வணக்கம் :

மானுடர் தம் வாழ்வில் தொல்லைகளையும், துன்பங்களையும் சந்திக்காமலிருப்பதற்காக பூசை மொழிகளை அன்றாடம் ஓதி அருளுலகத்தவர்களை வணங்கி வழிபட்டிடும் முறையே சந்தியா வணக்கம் (வந்தனம்) என்று குறிக்கப்படுவதாயிற்று. சிவபுராணம் எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், அந்த வேலையைச் செய்து கொண்டே அன்றாடம் ஒரு முறையாவது கூறிட வேண்டும். அல்லது பிறர் கூறக் கூற அவர் பின்னாலேயே கூறிடலாம். சிவபுராணம் கூறுவதால் அருளணுக்கள் படிப்படியாக ஒவ்வொருவருக்குள்ளும் நிறைந்திடும்.

அன்றாடப் பூசை மொழி :

எல்லா மானுடரும் தங்களுடைய எல்லையில்லா ஆசைகளாலும், வாழ்வியல் தொல்லைகளாலும் அருளுலக செல்வங்களான பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுவதற்கு அதிகமாக காலத்தையோ, பயிற்சியையோ, முயற்சியையோ,பொருளையோ செலவிட முடியாத நிலை உள்ளது. இதை கருத்தில் கொண்டே பதினெண் சித்தர் பீடத்தின் முதல் பீடாதிபதியும், மடாதிபதியும் ஆதிசிவனார் அவர்கள் ஒவ்வொருவரும் அன்றாடம் (தனக்கு வாய்ப்பும் ஓய்வும் கிடைக்கும் நேரத்தில்) கால் யாம (சாம) நேரத்திற்குள் (1 சாமம் - 2.30 மணி நேரம்) ஓதுவதற்கு வசதியாக பல வகைப்பட்ட காயந்திரிகளில் நான் வேத சுருக்கமாக நான்கே நான்கு காயந்திரிகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு அன்றாடப் பூசை மொழி எனப் பெயரிட்டு வழங்கியுள்ளார்கள்.

அவை, 1. அருட்சினை மந்திறம் 2. அருளூறு காயந்திரி மந்தரம் 3. அருளூறு காயந்திரி மந்திரம் 4. கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம். இந்த நான்கு காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களை மட்டும் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கு ஓய்வும் வாய்ப்பும் கிடைக்கும் நேரத்தில் அன்றாடம் குறைந்தது 18, 36, 48, 64, 96, 108 முறை என்று ஓதிப் பயிற்சி செய்ய வேண்டும். அன்றாடம் 108 முறைகளுக்கு மேல் இந்த பூசை மொழிகளை ஓதி வருபவர்கள் மிக விரைவில் பத்தி, சத்தி, சித்தி, முத்தியை எளிதில் பெறுவதற்குரிய ஓகாசனம், யோகாசனம், மேகாசனம், போகாசனம் எனும் பயிற்சி செய்வதற்குரிய தேர்ச்சி, முதிர்ச்சிகளைப் பெற்றிடுவர்.

## செய்முறை

**மெய்சுத்தம் :**

நீராடி முடிந்தவுடன் அல்லது முகம், கை, கால்களைக் கழுவிய பின் காயந்திரி மந்திரங்களை ஓதுவது மிகச் சிறந்தது.

**உடை :**

ஆண்கள் முகம், கை, கால்களை நீரால் கழுவிய பின்பு அல்லது நீராடியவுடன், நீராடிய உடையை (வேட்டி அல்லது துண்டு) நன்கு பிழிந்து இடுப்பில் கட்டிக்கொண்டு அவை முழங்காலுக்கு மேல் இருக்கும் வண்ணம் சுருக்கியோ, மடித்தோ வைத்துக் கொள்ளப்பட வேண்டும். இடுப்பிற்கு மேல் எந்தத் துணியும் இருக்கக்கூடாது. பெண்கள் முழுமையான ஆடையுடன் (ஈர உடை அல்லது துவைத்து உலர்ந்த ஆடை) ஓதலாம் ஈரத்துணியா கஇருந்தால் அதற்கெனத் தனிப்பயன் உண்டு.

**அணிகலன் :**

உருத்திராக்கம், மணிமாலை, மந்திரித்த முடிச்சுகள் போட்ட கயிறு, தாயத்து வில்லை... முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றையாவது கழுத்தில் அணிந்திருக்க வேண்டும். வலது மணிக்கட்டில் பசிய கொடி அல்லது மந்திரித்த முடிச்சுகள் போட்ட கயிறு, செப்புக்கம்பி வளையம் ஏதேனும் ஒன்று (பூசை நேரத்தில் மட்டுமாவது) அணிந்திருந்தால் சிறப்புடையது. திருநீறு, குங்குமம், சாந்து, சந்தனம், மை, திருமண் எனும் ஆறில் ஏதேனும் ஒன்றையாவது நெற்றி, கழுத்து, மார்பு, இரு கைகளில் பூசாவிதிப்படி அணிந்திருக்க வேண்டும்.

**இருக்கை நிலை :**

சம்மணமிட்டு அமர்தல், குத்தவைத்து அமர்தல், நாற்காலியில் அமர்ந்து கால்களைத் தொங்கவிட்டுள்ள நிலை, நின்ற நிலை என நான்கு நிலைகளில் கூறலாம்.

**அருளேற்று நிலை :**

நீர்த்துறையில் (ஆறு, குளம், கிணறு) அமர்ந்தும் காயந்திரி மந்திரங்களை ஓதலாம். அப்பொழுது சூரியன் எந்த திசையில் இருக்கிறதோ அந்த திசையைப் பார்த்து அமரவேண்டும். பூசா மொழியைச் சொல்லும் பொழுது ஒவ்வொரு முறையும் சின் முத்திரை நிலையில் வலது கையை வைத்துக் கொண்டு தண்ணீரை அள்ளிப் பூசா மொழி

கூறி முடித்தவுடன், உள்ளங் கையின் அடிப்பாகத்தில் கீழ்த்தட்டை வைத்து உறிஞ்சிப் பருகிட வேண்டும். பூசை மொழியை நான்கு முறை கூறி முடித்த பிறகோ அல்லது எட்டு முறை கூறி முடித்த பிறகோ தண்ணீரை அள்ளிப் பருகலாம். நீர்த்துறை இல்லாமல் வீட்டில் அமர்ந்து ஓதும்போது ஒரு குவளையில் நீர் வைத்துக்கொண்டு சிறிய கரண்டியினால் பூசை மொழி 4 முறை அல்லது எட்டு முறை கூறி முடித்த பிறகே நீர் அள்ளிப் பருகிடலாம்.

## பதினெண் சித்தர்களின் அருட்கொடை
## காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம்...

எல்லா மனிதர்களுமே தங்கள் தங்களுடைய மொழிக்கும், இனத்திற்கும், வட்டாரத்திற்கும், நாட்டுக்கும் உரிய கடவுள்களின் அருளைப் பெறவும், கடவுள்களைக் காணவும், கடவுள்களோடு நெருங்கிப் பழகித் தங்களையும் கடவுளாக்கிக் கொள்ளவும் பயன்படுகின்ற பூசை மொழிகளை, வழிவகைகளை அருட்கொடையாக பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும் அண்டபேரண்ட ஆட்சி மொழியுமான தாய்மொழியில் வழங்கி இருக்கிறார்கள்.

அவற்றுள் இக்காலத்திற்கு ஏற்றனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காயந்திரிகளை 12வது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் ஐயா அரசயோகி கருவூறார் அவர்கள் பல நூல்களாக வெளியிட்டுள்ளார். அந் நூல்களிலிருந்து பெறப்பட்ட காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்கள் இப்புகத்தில் உள்ளது. அடங்கிய இப்புத்தகத்தை இந்துமத பற்றாளர்கள் அவர்தம் வாழ்வில் எல்லா வளங்களையும் பெறவேண்டும்! பெறவேண்டும்!! கட்டாயம் பெறவேண்டும்!!! நிச்சயம் பெறமுடியும்!!!!

இந்தப் பூசை மொழிகள் மூலம் தமிழர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அந்த விழிப்புணர்வின் மூலம் அருளுலகின் வளமும், வலிவும், பொலிவும், ஆட்சி நிலையும் மிகச்சிறந்த செயல் நிலை பெறவேண்டும். இப்பூசை மொழியால் தமிழர்களுக்கு தமிழ் மொழியுணர்வு, இன உணர்வு, மத உணர்வு, பண்பாட்டு பாரம்பரிய உணர்வு முதலியவைகள் எல்லாம் செழிப்படைந்து, தமிழர்கள் ஒன்று திரண்டு, ஒற்றுமைப்பட்டு ஒருமைப்பாட்டுடன் செயல்படும் நிலை உருவாகவேண்டும். அப்பொழுதுதான் தமிழினம் அருளுலகுக்கே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாகச் செயல்படும் பணியில் முழு வெற்றியினைப் பெறமுடியும்.

இந்த பூசை மொழியை ஓதுபவர்கள் அனைத்து வகையான அச்ச, கூச்ச, மாச்சரிய இச்சைகளையெல்லாம் எளிதில் வென்றிடலாம். அருளை அனுபவப் பொருளாக பெற்றிடலாம். பெற்ற அருளை பிறர்க்கு மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடலாம். எப்பொழுதும் தன்நம்பிக்கையோடும், நிறைவோடும், நிம்மதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்திடலாம். ஒவ்வொரு தனிமனிதனும் ஏதாவது ஒரு பூசை மொழியையாவது தொடர்ந்து பயிற்சி செய்து அருளாளனாகி இம் மனிதப் பிறப்பின் பயனை அடைவதோடு இந்துவேத, இந்துமதப் பற்றுள்ளவர்களாக வாழ முன் வரவேண்டும்.

– குருதேவர், அரசயோகிக் கருவூறார்.

இப்புத்தகத்தில் உள்ள எந்த ஒரு காயந்திரி பூசா மொழி சொல்லுவதற்கு முன்னும் பின்னும் வேண்டுகோள் வாசகங்களைப் பயன்படுத்த வேண்டும். உறையினின்று வாளை எடுத்து உள்ளே போடுவது போல் காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் இந்த வேண்டுகோள் வாசகங்களை ஒரு முறை சொல்ல வேண்டும்.

இவ்வாசகங்களைப் பூசையின் ஆரம்பத்தில் கற்பூரம் ஏற்றியோ சாம்பிராணி காட்டியே, ஊதுபத்தி காட்டியோ, யாகம் வளர்த்தோ, அல்லது விண்மீன் பார்த்தோ, சூரியன் பார்த்தோ நிலவு பார்த்தோ ஒருமுறை சொல்லப்பட்டவுடன் காயந்திரி மந்திரம் (108) நூற்றெட்டுத் தடவைகள் ஓதப்படல் வேண்டும். பூசை முடிக்கும் போதும் மேற்படி வேண்டுகோள் வாசகங்கள் ஒரு முறை சொல்ல வேண்டும். பக்குவத்துக்கேற்பக் கண்ணை மூடியோ, திறந்தோ பூசை மொழி ஓதலாம். ஓதும்போது இடையிடையே கண்ணைத் திறந்தும் மூடியும் ஓதலாம்.

ஓம் நமச்சிவாய பராசத்தி சிவாயநம!
ஓம் சிவாயநம! பராசத்தி நமச்சிவாய!
ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!
ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!
ஓம் உண்டங்களே! பிண்டங்களே!
உயிரினங்களே! பயிரினங்களே!
அண்டங்களே! பேரண்டங்களே!
அண்ட பேரண்டங்களே!
வீழ்ச்சி கொள்க! எழுச்சி கொள்க! செழிச்சி பெறுக!
யாமே அனைத்துமாக உதவுக!
காயந்திரி மந்தரம் கூறுகிறேன்!
பயனாகட்டும்! சுவையாகட்டும்!
முற்பிறப்பும் மறுபிறப்பும் இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!
ஆவி ஆன்மா ஆருயிர் மூன்றும் ஒன்றாகட்டும்!
அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!
அப்பனாக! தாத்தாவாக இருப்பவர்களே!
ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக!

குறிப்பு : காயந்திரி மந்தரங்களை ஓதுவதற்கு முன் காயந்திரி மந்தரம் கூறுகிறேன், பயனாகட்டும் சுவையாகட்டும் என்றும் ஓதிய பிறகு காயந்திரி மந்தரம் கூறினேன் பயனாகட்டும், சுவையாகட்டும் என்றும் கூறவேண்டும்.

# மனிதரைக் கடவுளாக்கும் பூசை மொழி
# பதினெண் சித்தர்களின் பாடல்கள்

**பதினெண் சித்தர்களுடைய பூசைமொழிகளான பதினெண் மையக் கணக்கு நூல்கள் ஆறும் செய்யுள், கவிதை, பாட்டு என்ற மூன்று வகை இலக்கிய நடைகளைப் பெற்றிருக்கின்றன. இவை சொற்செறிவும் எளிதில் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற இனிய இசைப்போக்கும் உடையவை. ஆனால், இவற்றிற்கு ஆரம்ப வேண்டுகோள்களும், நிறை வேண்டுகோள்களும், அருளுலக அறிவிப்பிற்குரிய ஒரு வரி, இரண்டு வரி வாசகங்களும் மிகுதியாக உரைநடையிலேயே இருக்கின்றன.**

**பதினெண் சித்தர்களுடைய நூற்றெட்டுப் பூசைமொழி நூல்களில் எந்த நூலிலிருந்து எந்தவொரு பூசைமொழியை ஓதினாலும் சரி, திரும்பத் திரும்ப உரைத்தாலும் சரி அதுவே எல்லாவித பத்தி சத்தி சித்தி முத்தி முதலியவைகளைத் தந்துவிடும். இதற்குப் பெரும்பாலும் யாருடைய வழிகாட்டலோ வழித்துணையோ கூட இல்லாமல் அவரவர் பயிற்சியும் முயற்சியும் தொடர்ந்து ஆர்வமுடனும் நம்பிக்கையுடனும் நிகழ்ந்தாலே போதும்.**

**மனிதர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் எல்லாவகையான ஆசைகளையும் துறந்தும் மறந்தும்; தாங்கள் கடவுளைக் காணவேண்டும், கடவுளோடு உரையாடி உறவாடிக் கலந்து வாழவேண்டும். தாங்களும் கடவுளாகவே ஆகிடவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்காக மட்டுமே எழுதப்பட்டதுதான் இந்த மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி என்ற ஒரே ஒரு பூசைமொழி. இது நூற்றெட்டுப் பூசை மொழிகளிலும் ஏதேனும் ஓரிடத்தில் முன்னால், பின்னால், நடுவில் நெடிய பல விளக்கங்களோடு செயல் சித்தாந்த விதி நெறிமுறைகளோடு எழுதப்பட்டிருக்கிறது.**

**குறிப்பாக, இப்பூசைமொழிக்கு மட்டும் அண்டபேரண்டமாளும் சித்தர்களின் தொடர்புடைய அல்லது அவர்களிடம் பக்தியுள்ள குரு ஒருவர் வழிகாட்ட அல்லது வழித்துணையாக அமைந்திடப் பயிற்சி முயற்சி செய்தால் நன்று என்ற பரிந்துரை தரப்பட்டிருக்கிறது. மேலும் இப் பூசாமொழியை சித்தி செய்ய முயலுபவர்கள் அறிவு விழித்த நிலையிலேயே பழம் பிறப்புக்களோடும், மறு பிறப்புக்களோடும் அடிக்கடி தொடர்பு கொள்ள நேரிட்டுப் பித்து நிலையை எய்திட நேரிடும் என்றும் குறிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

இப்படி ஒரு பூசைமொழி பதினெண் சித்தர்களால்தான் வழங்கப்பட்டிருக்கிறது இதனைப் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்தினுடைய பூசை மொழியின் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## மனிதரைக் கடவுளாக்கும் இந்துமதப் பூசைமொழி
## பதினெண் சித்தர் அருளியது

1. கனல் காற்றாகிப் பனியாகிப் புனலாயுருகிக்
2. கல்லாய் மண்ணாய் மணலாய்ச் சேராகிப்
3. புல்லாய்ப் பூடாய்ச் செடிகொடியாய் மரமாகிப்
4. புழுவாய் பூச்சியாய் விலங்காய் பறவையாகி;
5. மனிதராய் இருடியாய் முனிவராய்ப் பட்டவராகி
6. அமரராய் ஆண்டவராய்த் தெய்வமாய்த் தேவராகி
7. இறையாய் உருத்திரராய் எல்லாவாய் ஐஈசுவரியாகிக்
8. கருத்தும் காலமும் கடந்த கடவுளாகித்
9. திருத்தம் வழங்கு தனிப்பெரும் பல்பொருளாகி;
10. வானாகி விண்ணாகி ஆகாயமாகிக் ககனமாய்;
11. விசும்பாய்ப் பரவெளியாய் பாழ்வெளியாய் நிறைந்து (பாழ்வெளி - பால்வெளி)
12. பிண்டமாய் அண்டமாய்ப் பேரண்டமாய் அண்டபேரண்டமாகி;
13. அருவாய் அருவுருவாய் உருவஅருவாய் உருவாகித்
14. திசைகள் நான்காய், எட்டாய்ப், பதினாறாகி,
15. முப்பத்திரண்டாய், அறுபத்து நான்காய் விளங்கிடும் தத்துவமே!
16. கணக்கற்ற கோடிக் கடவுள்களாக வாழ்ந்தும்; (கடவுள்களாக --> கடவுளராக)
17. கண்படைத்த மனிதரால் காணமுடியா நிலையிலே;
18. மெய்ப்பத்தரைக் காக்கும் நிறைமனத்தீரே!
19. வாய்மையாகத் தூயபத்தி செய்பவர்க்கே உய்வினைச்
20. சத்தியாக்கிச் சித்தியாக்கி முத்தியாக்கிச் சித்தாகிடும் (சித்தாக்கிடும் - சித்தாகிடும்)
21. கோலங்கள் கோடிபல கொண்டருளு கடவுளரே!
22. எல்லோரும் எளிதில் எய்திட வாழும் எண்ணற்றோரே!
23. ஏதாவதொரு வழிபாட்டால் எப்படியும் உங்களில்
24. தோதாகச் சிலராவது கிடைத்திடுவீர் நம்புகிறோம்;
25. மனிதரோடு மனிதராய்த் தொண்டாற்றும் புனிதீர்!
26. தொழுகிறோம், வழிபடுகிறோம், வணங்குகிறோம், கும்பிடுகிறோம்;
27. எங்களையும் கடவுளாக்கிக் காத்து அருளுக!

ஆஓ! ஈஓ, ஊஓ! ஏஓ! ஐஓ! ஃஓ!
கஓ! சஓ! டஓ! தஓ! பஓ! றஓ!
ஙஓ! ஞஓ! ணஓ! நஓ! மஓ! னஓ!
யஓ! ரஓ! லஓ! வஓ! ழஓ! ளஓ!
அஓ! இஓ! உஓ! எஓ! ஒஓ! ஔஓ!

**அம் ஆம்! இம் ஈம்! உம் ஊம்!**
**எம் ஏம்! ஐம் ஐம்! ஒம் ஓம்!**
**ஔம் ஔம்! ஔம் ஔம்! ஔம் ஔம்!**
**ஃம் ஃம்! ஃம் ஃம்! ஃம் ஃம்!**

**குருவழி முறையாகப் பயிற்சி செய்தால் விரைவில் நிறைந்த பயன் கிடைக்கும்.**

## குரு வணக்கம்

**ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணை! ஓம் குருவே எல்லாம்!**
**ஓம் குருவே போற்றி! ஓம் குருவே சரணம்!**

**ஓம் குருவே அனைத்திற்கும் விழியாக இருக்கின்றார்!**
**ஓம் குருவே அனைத்திற்கும் வழியாக இருக்கின்றார்!**
**ஓம் குருவே அனைத்திற்கும் வழித்துணையாக இருக்கின்றார்!**
**ஓம் குருவே அனைத்திற்கும் வழிப்பயனாக இருக்கின்றார்!**
**ஓம் குருவே அனைத்திற்கும் வழிகாட்டியாக இருக்கின்றார்!**
**ஓம் குருவே அனைத்திற்கும் எல்லாமுமாக இருக்கின்றார்!**

## சிவபுராணம்

**ஓம் நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!**
**இமைப் பொழுதும் என் நெஞ்சில்; நீங்காதான் தாள் வாழ்க!**
**கோகழி ஆண்ட; குருமணிதன் தாள் வாழ்க!**
**ஆகமம் ஆகிநின்று; அண்ணிப்பான் தாள் வாழ்க!**
**ஏகன் அநேகன்; இறைவன் அடி வாழ்க!**

**வேகம் கெடுத்து ஆண்ட; வேந்தன் அடி வெல்க!**
**பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன்; பெய்கழல்கள் வெல்க!**
**புறத்தார்க்குச் சேயோன் தன்; பூங்கழல்கள் வெல்க!**
**கரம் குவிவார் உள்மகிழும்; கோன் கழல்கள் வெல்க!**
**சிரம் குவிவார் ஓங்குவிக்கும்; சீரோன் கழல் வெல்க!**

**ஈசன் அடி போற்றி; எந்தை அடி போற்றி!**
**தேசன் அடி போற்றி; சிவன் சேவடி போற்றி!**
**நேயத்தே நின்ற; நிமலன் அடி போற்றி!**
**மாயப் பிறப்பு அறுக்கும்; மன்னன் அடி போற்றி!**
**சீரார் பெருந்துறை நம்; தேவன் அடி போற்றி!**

**ஆராத இன்பம்; அருளும் மலை போற்றி!**
**சிவன் அவன் என்சிந்தையுள்; நின்ற அதனால்**
**அவன் அருளாலே; அவன் தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச்; சிவ புராணம் தன்னை**
**முந்தைவினை முழுதும்; ஓ உரைப்பன் யான்.**

**கண்நுதலான் தன் கருணைக்; கண்காட்ட வந்து எய்தி**
**எண்ணுதற்கு எட்டா; எழில் ஆர்கழல் இறைஞ்சி**
**விண்நிறைந்தும் மண்நிறைந்தும்; மிக்காய் விளங்குஒளியாய்**
**எண்நிறைந்தும் எல்லை; இலாதானே! நின்பெரும்சீர்**
**பொல்லா வினையேன்; புகழுமாறு ஒன்று அறியேன்**

**புல் ஆகிப் பூடாய்ப்; புழுவாய் மரம் ஆகிப்**
**பல்விருகம் ஆகிப்; பறவையாய் பாம்பு ஆகிக்**
**கல்லாய் மனிதராய்ப்; பேயாய்க் கணங்களாய்**
**வல் அசுரர் ஆகி; முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற; இத்தாவர சங்கமத்துள்**

**எல்லா பிறப்பும் பிறந்து; இளைத்தேன் எம்பெருமான்!**
**மெய்யே! உன் பொன் அடிகள்; கண்டு இன்று வீடுற்றேன்**
**உய்ய என் உள்ளத்துள்; ஓங்காரமாய் நின்ற**
**மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்;**
**ஐயா!, என ஓங்கி; ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!**

**வெய்யாய்! தணியாய்! இயமானனாம் விமலா!**
**பொய் ஆயின எல்லாம்; போய் அகல வந்து அருளி**
**மெய்ஞ்ஞானம் ஆகி; மிளிர்கின்ற மெய்ச்சுடரே!**
**எஞ்ஞானம் இல்லாதேன்; இன்பப் பெருமானே!**
**அஞ்ஞானம் தன்னை; அகல்விக்கும் நல் அறிவே!**

**ஆக்கம் அளவு இறுதி; இல்லாய் அனைத்து உலகும்**
**ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்!; அருள் தருவாய்!**
**போக்குவாய்! என்னைப்; புகுவிப்பாய் நின் தொழும்பில்**
**நாற்றத்தின் நேரியாய்!; சேயாய்! நணியானே!**
**மாற்றம் மனம் கழிய; நின்ற மறையோனே!**

**கறந்த பால் கன்னலொடு; நெய் கலந்தாற் போலச்**
**சிறந்து அடியார் சிந்தனையுள்; தேன் ஊறி நின்று**
**பிறந்த பிறப்பு அறுக்கும்; எங்கள பெருமான்!**
**நிறங்கள் ஓர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த**
**மறைந்து இருந்தாய் எம் பெருமான்; வல்வினையேன் தன்னை**

மறைந்திட மூடிய; மாய இருளை
அறம் பாவம் என்னும்; அரும் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும்; புழு அழுக்கு மூடி
மலம் சோரும்; ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும்; வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால்; விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக்; கசிந்து உள் உருகிடும்
நலம் தான் இலாத; சிறியேற்கு நல்கிட
நிலம்தன் மேல் வந்து அருளி; நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க்; கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்ததொரு; தயாவான தத்துவனே!
மாசு அற்ற சோதி; மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேனார்; அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்துப்; பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து; நெஞ்சினில் வஞ்சம் கெடப்

பேராது நின்றதொரு; பெரும் கருணைப் பேராறே!
ஆரா அமுதே; அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்துள்; ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி; என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும்; இல்லானே உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம்; நடுவு ஆகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட; எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்; கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரியநுண் உணர்வே!
போக்கும் வரவும்; புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம்காவலனே!; காண்பரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே!; அத்தா! மிக்காய் நின்ற!
தோற்றச் சுடர் ஒளியாய்!; சொல்லாத நுண் உணர்வாய்!

மாற்றமாம் வையகத்தின்; வெவ்வேறே! வந்து அறிவாம்
தேற்றனே! தேற்றத்; தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார்; அமுதே! உடையானே!
வேற்று விகார; விடக் குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா!; அரனே ஓ! என்று என்று

போற்றிப் புகழ்ந்து இருந்து; பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து; வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பை; கட்டு அழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல்பிறவி; அறுப்பானே! ஓ! என்று
சொல்லற்கு அரியானைச்; சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின்; பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்; உள்ளார் சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

## சிவபெருமான் துதி

ஓம் தென்நாடுடைய சிவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் அர அற நமப்பார்வதி பாதமே போற்றி!
ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!

ஓம் எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே
ஓம் எல்லாம் வல்லான் தனையே ஏத்து,

## ஓம் விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தானை; யானை முகத்தானை
இந்தின் இளம்பிறை; போலும் எயிற்றானை
நந்தி மகன் தனை; ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பறனே! ஐங்கரனே! செஞ்சடையாய் சேகரனே!
தற்பறனே! நின் தாள் சரண்.

## அருட்பா துதி

**ஓம் அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!**
**ஓம் தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!**

**ஓம் தாத்தா வடலூர்ப் பெரு வெளிப் பெருந்தகை**
**திருவருட் பிரகாச அருட்பெருஞ்சோதி ஆண்டவர்**
**அருட்கொடை வள்ளல் திருவருட் செல்வர்**
**ஞானசபைத் தோன்றல் வடலூர்க் கருங்குழி**
**வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளாரே**

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்! சரணம்! சரணம்!**
**ஞான வணக்கம்**
**ஓம் புத்தம் சரணம் கச்சாமி!**
**ஓம் சங்கம் சரணம் கச்சாமி!**
**ஓம் தருமம் சரணம் கச்சாமி!**
**ஓம் உருவம் சரணம் கச்சாமி**

**ஓம் புத்தம், சங்கம், சரணம், தருமம், உருவம் கச்சாமி**

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!**

### குரு பாரம்பரிய வேண்டல் விண்ணப்பம்

**அருளுலகப் பொருளுலக இருளகற்ற அருளாட்சி அமைப்போம். ஏக்கங்களையும் தேக்கங்களையும் போக்க சமுதாய மாற்றம் செய்வோம். மனித வாழ்வே புனித வாழ்வு எங்கும் எதிலும் இனிமையை அமைதியை நிறைவை நிம்மதியை மகிழ்வை அன்பை அறவழியில் காண்போம்.**

## ஞானாச்சாரியார் போற்றி

**ஓம் அனாதிக் கருவூறாரே போற்றி!**
**ஓம் ஆதிக் கருவூறாரே போற்றி!**
**ஓம் தென்மதுரைக் கருவூறாரே போற்றி!**
**ஓம் தென்மதுரைக் கருவூறாரே போற்றி!**
**ஓம் குமரியாற்றங்கரைக் கருவூறாரே போற்றி!**
**ஓம் பஃறுளியாற்றங்கரைக் கருவூறாரே போற்றி!**
**ஓம் கபாடபுரத்துக் கருவூறாரே போற்றி!**

**ஓம் தாமிரபரணியாற்றங்கரைக் கருவூறாரே போற்றி!**
**ஓம் வைகையாற்றங்கரைக் கருவூறாரே போற்றி!**

**ஓம் ஐம்புலன்களும் காணவாழும் பத்தாவது பதினெண் சித்தர்**
**பீடாதிபதி, இந்துமதத்தந்தை, தத்துவநாயகம், அருளாட்சி நாயகம்,**
**கரூர் பசுபதீசுவரர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டிய**
**குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர்**

**தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களே!**

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்! சரணம்!**

**ஓம் ஐம்புலன்களும் காணவாழும் பதினோறாவது பதினெண் சித்தர்**
**பீடாதிபதி, இந்துமதத்தந்தை, தத்துவநாயகம், அருளாட்சி நாயகம்,**
**தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய அண்டபேரண்ட அருட்பேரரசர்,**
**குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர்**

**தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களே!**

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்! சரணம்!**

**மேலே குறிப்பிட்ட தமிழின ஆச்சாரியரான, குருபீடமான, குருதேவரான, பதினெண் சித்தர் பீடத்தின் மரபில், விந்துவழி வாரிசாகத் தோன்றி என்றென்றும் வாழுகின்ற எங்கள் குருதேவர் பரம்பிரம்மம், எல்லாம்வல்ல சித்தர், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அருளாட்சி நாயகம், நான்குயுக நாயகம், தத்துவ நாயகம், எட்டாம் பிறப்புடையார், நல்லிலக்கண மார்புடையார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத்தந்தை, ஞானாச்சாரியார், இந்துமத ஆச்சாரியார், இராசிவட்ட நிறைவுடையார், பேரருள்மிகு பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, குருமகா சன்னிதானம், குருதேவர் ஞாலகுரு சித்தர்**

**ஐயா அரசயோகிக் கருவூறார் அவர்களே!**

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்! சரணம்!**

**ஓம் தாத்தா 1359 அண்டபேரண்டங்களிலும் அருளாட்சி புரியும்**
**அருட்பணித் தலைவர் வழிபடு நிலையினர் பசுபதி**

**அருட்சோதி மதுரைச்சோதி பேரருள்மிகு மதுரை**
**தாத்தா பாண்டிமுனீசுவரர் அவர்களே!**

**போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்!**

**ஓம் ஆத்தாள்தேவி உலகச் சுடுகாடுகளின் தலைவி எங்கள்**
**குருதேவரின் தர்மபத்தினி திருச்சி**
**ஓயாமெரிச் சுடலை பத்திற காளியம்மனே**

**போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்!**

**ஓம் ஆத்தாள்தேவி ஆலவாய் மாமூதூர்**
**அருளாட்சி திருநகர்ச் செல்வி மதுரை**

**தத்தநேரி சுடலை பத்தர, பத்திர, பத்திற**
**காளியே ஐஈசுவரியே**

**போற்றி! போற்றி! போற்றி!**
**சரணம்! சரணம்! சரணம்!**

**அன்றாடப் பூசை மொழி**
**தன்னையறிந்து தலைவனையறியப் பயன்படும்**

**அருளூறு காயந்திரி மந்தரம்**
**(சத்தி காயந்திரி மந்தரம்)**

**ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணாகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!**

ஒவ்வொருவரும் அன்றாடம் தனித்துப் பூசைகளில் 108 முறை ஓதி
அருளைப் பெறும் காயந்திரி மந்தரம்.

காயந்திரி மந்தரத்தை ஓதுகின்ற பெண் ஒருவர் தன்மனதில் எந்த
கடவுளை நினைத்து ஒரு நாளைக்கு (108) முறை ஓதுகிறாரோ
அந்த கடவுளாகவே மாறிவிடுவார். முகம் பொலிவடையும்.
கண்கள் மான்களின் விழிகளைப்போல் மாறும்.

தலைவனுக்குள் தன்னை நிறுத்தித் திரம் (வலிமை)
பெற்றிடுவதற்காக ஓதும்

அருளூறு காயந்திரி மந்திரம்
(சத்தி காயந்திரி மந்திரம்)

ஓம் சத்தியே, காத்தாயி அயனாய வித்தின் மகவே!
வாலையே! கன்னியே! குமரியே! நங்கையே! தீயனெ மலர்ந்திடு
தீயே, உன்னோடு தூர்த்திடு பிரச்சினை யாவும்
தாயே, என்னோடு உயிரினப் பயிரினக் காப்பு வழங்கிடு.

தனித்தும், பிறரோடு கலந்தும் அன்றாடம் பூசைகளில் 108 முறை ஓதி
அருளுலகத் திரத்தை (வலிமையை) வர்த்துக்கொள்ள உதவுவதே
இந்தச் சத்தி காயந்திரி மந்திரம்.

## கருவறை உயிர்ப்பு மந்திறம்

ஓம் பாண்டிய சோழ சேர பெருமண்டலத்து காவல் தெய்வங்களே!
அமரர்களே! வானவர்களே! விண்ணவர்களே! இருடிகளே! முனிவர்களே!
கனங்களே! சமாதுகொண்டருளு தேவநிலைப் பெரியோர்களே!

ஓம் ஆத்தாள் வீரமாகாளியே!

ஓங் ஓஂஂங் ஓஂஂங்கி
தழைத்து எழுநீ

அங் உங் மங்
சிவாயநம நமசிவாய
மசிவாயந நமசிவாய

ஔ வவ் வாவ் ஓம் அரீம்
தங்ரீ தாங்ரீ ஓங்ரீ ஔம்

இக்கோயில் / இவ்வீட்டுக்குரிய குலதெய்வங்கள் இடம் விட்டுப் போயிருந்தால் ஒரு மண்டல காலத்துக்குள் திரும்பிக் கருவறையில் அமர்க! (இல்லத்தில் அமர்க!) திருவோலக்கம் புரிக! அருளாட்சி அமைக்க ஞாலகுரு, ஞானகுரு, அசுரகுரு, சுருகுரு, தேவகுரு, குருதேவர் பன்னிரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூறார் திருவுள ஒப்புதலும் குருவாணையும் பெற்று வந்துள்ளார்.

ஓம் அங் உங் மங் நசி நசி நசி நசி நசி
ஓம் அரீய் உரீய் மரீய் மசி மசி மசி மசி மசி

ஆத்தாள் வீரமாகாளிக்குள்ள
கட்டுக்கள் அறுக! கட்டுக்கள் அறுக!
தடைகள் உடைக! தடைகள் உடைக!
காப்புக்கள் கழல்க! காப்புக்கள் கழல்க!

ஆத்தாள் வீரமாகாளிக்கு
எல்லாம் வல்லதாயுள்ள சத்தி வந்தது!
எங்குமுள்ள சத்தி எழுந்தது!
எல்லாமாயுள்ள சத்தி வடிவமுற்றது!

ஓம் அம்! ஆம்! உம்! ஊம்
வசி! வசி! வசி! வசி! வசி!
வாசி! வாசி! வாசி! வாசி! வாசி!

ஆத்தாள் வீரமாகாளியே
அழைக்கிறோம் திருவாணையால்
அழைக்கிறோம் குருவாணையால்

அருளாட்சி அமைப்போம்
அருளாட்சி காப்போம்
அருளாட்சி வளர்ப்போம்
அருளாட்சி மலர்க! அருளாட்சி மலர்க!

கருவோலக்கம் ஆட்சி பெறுக!
திருவோலக்கம் ஆட்சி பெறுக!
நாலோலக்கம் ஆட்சி பெறுக!

குரு வாழ்க! குருவே எல்லாம்! குருவே துணை!

**ஓம்! ஓம்! ஓம்! ஓம்**
**ஓம்! ஓம்! ஓம்! ஓம்!**

**பராசத்தி நமசிவாய போற்றி!**
**நமசிவாய பராசத்தி போற்றி!**
**அருவங்களே போற்றி!**
**உருவங்களே போற்றி!**
**அருவுருவங்களே போற்றி!**
**உருவ அருவங்களே போற்றி!**

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**

**அனைத்தும் நமதே ஆகுக! நமக**
**அனைத்தும் சுவையே ஆகுக! சுவாக.**

**ஓம்! ஓம்! ஓம்! ஓம்!**
**ஓம்! ஓம்! ஓம்! ஓம்!**

**ஓம் வீரமாகாளியின் நிலை தாது ஆச்சு தாதாச்சுது.**

**குறிப்பு : இக்கருவறை உயிர்ப்பு மந்திறத்தைச் சொல்லி முடிக்கும்போது ஒவ்வொரு தடவையும் அந்தக் கருவறைக்குரிய கடவுளரின் பெயரை அல்லது குறிப்பிட்ட வீட்டின் தலைவரின் பெயரைச் சொல்லி இவர்களின் நிலை தாது ஆச்சு... தாதாச்சுது என்று கூற வேண்டும். இரவு 11 - 1 1/2 இல்தான் கூறவேண்டும்.**

**இக்குறியிட்ட இடங்களில் அந்தந்த ஊர் - கோயில் கடவுள்களின் பெயரைக் கூறவேண்டும்.**

**குருவால், குருவாணை பெற்றவர்களால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் பெற்றவர்களுக்கு மட்டுமே இது நிறைவான பயன்களை விரைவாகத் தந்திடும்.**

## மதுரைப் பாண்டி முனீசுவரர் காயந்திரி மந்தரம்

**பதினெண் வழிபடு நிலையினர் பதியே!**
**விண் கடந்த வாழ்வு காக்கும் கதியெ!**
**எண்ணிலாத் தீவினை தீர்க்கும் ஆதியே!**
**துண்ணுறு துயருறுவோர் பரவும் ஓதியே!**
**அருட்சோதியே தாத்தா மதுரைச் சோதியே!**
**ஆண்டவரே பாண்டி முனீசுவரரே பேணுக!**

## மதுரைப் பாண்டி முனீசுவரர் காயந்திரி மந்திரம்

“வெட்டவெளியே கோட்டையாக்கித் திக்கெட்டும் ஆளுமீசுவர
பட்டயமின்றி ஆணையிட்டே பகைவர் அடக்கிடும் ஈசுவர
தேட்டையர் திருடர் கயவர் தீமை தீர்க்கும் ஈசுவர
வாட்டிடும் துயரமெல்லாம் ஓட்டிடும் பாண்டி முனீசுவர
நாட்டமுற்றோம் பாடுகிடக்கிறோம் கட்டிக்காத்திடுக பாண்டிமுனீசுவர”

## மதுரைப் பாண்டி முனீசுவரர் காயந்திரி மந்திறம்

தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவர வழிபடு நிலையே
விண்ணும் மண்ணும் பெற்ற திருக்கல்,
பயிரினம் பெற்ற தருக்கல்
எண்ணிலா உயிரினம் பெற்ற கருக்கல்
அருட்செல்வர் உருவாக்கும் குருக்கல்

வண்ண ஆளுகை திண்ணமுறச் செய்யும்
ஆக்கமே ஊக்கமே பயனே

வல்ல தீமை அனைத்தும் தடுக்கும்
வழிபடு நிலையினர் சிறப்பே அருளே

உன் திருப்பெயரே மானுடம் காக்கும்
விருந்தும் மருந்துமாம் அரசே

ஏற்றிப் போற்றுதும் ஏற்றிப் போற்றுதும்
ஏற்றிப் போற்றுதும் ஏற்றிப் போற்றுதும்

பசுங்குருதிப் பலி ஊன் சோற்றுப்படையல்
நறுவாசனைத்தூப தீபம் மலர் மாலை ஆடை

பசுங்குருதிப் பலி ஊன் சோற்றுப்படையல்
நறுவாசனைத்தூப தீபம் மலர் மாலை ஆடை

எளியோர் தரும் எளியன ஏற்றுக்
காக்கும் கடவுளே காவல் அரசே

வணங்குகிறோம்! வாழ்த்துகிறோம்! காத்திடுக!
வணங்குகிறோம்! வாழ்த்துகிறோம்! காத்திடுக!
வணங்குகிறோம்! வாழ்த்துகிறோம்! காத்திடுக!

ஓம் முனீசுவர நலமாகுக! சுவையாகுக! பயனாகுக! காவலாகுக!
ஓம் முனீசுவர நலமாகுக! சுவையாகுக! பயனாகுக! காவலாகுக!
ஓம் முனீசுவர நலமாகுக! சுவையாகுக! பயனாகுக! காவலாகுக!

### ஆஞ்சநேயர் காயந்திரி மந்தரம்

ஓம் அனுமானே அனுமானே ஆஞ்சநேயா!
பத்தி நெறியின் சித்தி விளக்கமே முத்திப்பயனே!
வானுலக நாயகர்கள் போற்றும் மாவீரா!
வாநர சேனையின் தளபதியே இராமபத்தியாளனே!
அழைக்கிறோம் தழைத்தெழுவீராகுக!

### ஆஞ்சநேயர் காயந்திரி மந்திரம்

ஓம் கேசரிப் புதல்வா சூரிய மாணவ தழைத்தெழுக!
வாயு செல்வனே இந்திர வச்சிராயுதம் வென்றவனே!
அழைக்கின்றோம் உனையே! அழைக்கின்றோம் உனையே!
அழைக்கின்றோம் உனையே! அழைக்கின்றோம் உனையே!

### ஆஞ்சநேயர் காயந்திரி மந்திறம்

ஓம் அஞ்சனைமைந்தா வாநரகுலம் தழைத்திட வந்தவனே!
வாநர குலத்தை நிலைத்த புகழ் பறெச் செய்தவனே!
கவலைகளை அகற்றி கலைகளை அருளிட வாராய்!
எக்கணமும் எங்களைக் காக் எழுந்தருள் வீராகுக!

### ஆஞ்சநேயர் காயந்திரி மாந்தரம்

ஓம் ஓம ஓகத் தத்துவமே யாக யக்ஞ சித்தாந்தமே
வேள்விப் பெருஞ்சுடரே ஆஞ்சநேயா அருட்பெருஞ்சுடராய்
எழுந்திவீர்! எழுந்திடுவீர்! எழுந்திடுவீர் – எங்களைக்
காத்திடுவீர்! காத்திடுவீர்! காத்திடுவீர்!

### ஆஞ்சநேயர் காயந்திரி மாந்தரீகம்

ஓம் பிறம்மச்சாரத் தவத்தின் கொழுஞ்சுடரே!
ஆகாய வாகனனே எங்கள் தீமைகளைத் தீர்த்தழித்திட வாராய்!

நவ கோள்கள் அணுகமுடியாத் தீரனே தவச் செல்வனே!
தாகங்களைத் தணித்திடுவாய் யோகங்களை அளித்திடுவாய்!
ஓம் நமோ நம நாராயண நாராயணீ நமகா

## சிவ (சீவ) காயந்திரி மந்திரம்

சீவ காயந்திரி மந்திரம் ஓதுபவர்கள் இலிங்க வடிவம், அல்லது ஐங்கோணச் சக்கரம், அல்லது (தட்சிணாமூர்த்தி) குரு வடிவ ஓவியம், அல்லது புகை எழுப்பி, அல்லது ஒளி விளக்கேற்றி, அல்லது சூரிய சந்திர ஒளி பார்த்து சீவனான சிவனை வழிபடுங்கால் கூறி அருட்பயனைத் துய்க்கலாம். இதனைக் கூறும் போது ஏதாவது படையல் படைக்கப் படவேண்டும். இதனைக் கூறுபவர்கள் ஆரம்பத்திலும், இறுதியிலும் கறிவேப்பிலை இலைகள் சிலவாவது சாப்பிட வேண்டும்.

தத்துவப் பிறப்பாய் வித்தே! மகேசா!
மகாதேவே! நீ தீயே யாகி
தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்;
என்னோடு உன்னோடன்றி எங்கும் அருளூற
ஓம் நமச்சிவாய் சிவாயநம ஒலியருளினாய்!
தழைத்தெழு நீ! நாங்கள் பிழைத்தெழ அருளு நீ!
அழைக்கிறோம்! செழுந்தீயே! செழித்தெழு நீ!
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி
வசிவசி! வசிவசி! வசிவசி!
ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்;
ஓம் ஆவி, ஆன்மா, ஆருயிர் ஒன்றாகட்டும்;
தத்துவமே! நமச்சிவாய மென்றுணர்ந்தோம்
சித்தாந்தமே! சிவாயநம வென்றுணர்ந்தோராம்
நங்! மங்! சிங்! வாங்! யங்
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!





# பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி

**(பிள்ளையார், கணபதி, விநாயகர் காயந்திரி)**

**அனாதிக் காலத்திற்கும் முற்பட்ட காலக்கட்டத்தில் அண்ட பேரண்டங்களிலிருந்து வந்திருந்த பதினெண் சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள்... முதலியவர்களால் இம்மண்ணுலகில் நந்தி தேவன் என்பவருடைய மகனைக் கொண்டு உருவாக்கப்பட்ட கடவுளரே பிள்ளையார், கணபதி, விநாயகர் என்ற மும்மூர்த்திகளாக விளங்குகின்றனர்.**

**இவர்களுக்கான படையல் பொருட்கள் காலப்போக்கில் மாறி வந்திருக்கின்றன. ஆரம்ப காலத்தில் பழவகைகள் படைக்கப்பட்டன. பின்னர் காலப் போக்கில் நாகரீக வளர்ச்சிக்கேற்பப் பச்சரிசி, வெல்லம், எள், ஏலக்காய், தேங்காய் முதலியவை கலந்த காப்பரிசி (தங்களைக் காப்பாற்றுவதற்காகப் படைக்கப்படும் படையல் என்பதால் இது காப்பரிசி என்று பெயர் பெற்றது) படைத்தனர். அதன் பிறகே, வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப சுண்டல் (புழுக்கல்), கொழுக்கட்டை, மாவிளக்கு, மற்றப் பணியாரங்கள் படைக்கும் மரபு தோன்றிற்று. இவர் சிறந்த காத்தற் கடவுள் என்பதால் குட்டியும், குனிந்தும் தொப்பைக் கரணமிட்டும் மிகுந்த பணிவோடு நிதானமாகக் கும்பிட வேண்டும் என்பது மரபு.**

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்தரம்

**ஓம் காயந்திரிந்து, ஆவியான்மா ஆருயிர் ஒன்றாகிடுக!**
**பிள்ளையார், கணபதி, விநாயகர் மனைவியரோடு ஏந்தருளுக!**
**ஓம ஓக! யாக யக்ஞ! வேள்வித் தீயே! மூலாதாரப் பிறணவமாகுக!**
**சித்தி புத்தி! அத்தி முத்தி! வல்லபையாம் தீமை தீய்க்கும் தீயே!**
**இருளகற்றுக! இன்னல் தவிர்த்திடுக! அருள்நலம் வழங்கிடுக!**

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்திரம்

**ஓம் பிள்ளையாரே! கணபதியே! விநாயகரே! மூலாதாரச் சத்தியே!**
**ஞானப் பிறவியே! மோனப் பொருளே! வானவர் போற்றும் அமுதே!**
**மனைவியர் பதினைவரோடு வாழும் பிறணவப் பீடமே!**
**குருதிப் பொறியல், குடல்தலைக்கறி, கொழுக்கட்டை, புழுக்கல், கடலையவல் பொறி;**
**விரும்பியன படைக்கிறோம்! நலம் நல்குக! அருள் வழங்குக!**
**சித்திகளித்திடுக!**

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி மந்திறம்

**ஓம் யானைத்தலை மனிதவுடலுற்று யாரிந்தப் பிள்ளையென்றானவரே!**
**ஓம் மனிதத்தலை யானையுடலுற்றுக் கணங்களின் தலைவரான கணபதியே!**
**ஓம் வினைகளின் நாயகராய் அருவுருவாய் ஐம்பூதமாளும் விநாயகரே!**
**தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக!**
**தழைத்தெழுவீராகுக! தழைத்தெழுவீராகுக!**
**ஓகபோக! மோகதாக; வேகவெறிகள்! வென்றுய்வுயர்வு பெறச் செய்வீராகுக!**

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி தோத்தரம்

**மந்திற, தந்திற, எந்திற மூலச் சுருதியே! போற்றி!**
**ஆரண, ஆகம, மீமாம்சை விளக்கமே! போற்றி!**
**அத்திற, சாத்திற, சூத்திற, நேத்திரப் பொருளே போற்றி!**
**நேம, நியம, நிடத, நிட்டைத் தத்துவமே போற்றி!**
**பிள்ளையாரே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**கணபதியே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**விநாயகரே போற்றி! போற்றி! போற்றி! போற்றி!**
**சிவக்குமரா! பார்வதி பாலகா! முருகச் சோதரா! போற்றி!**
**கணநாதனே! நாதாந்த நந்தி மகனே! சித்தர் சித்தியே! போற்றி!**
**ஐந்தெழுத்தே! அறுகோணமே! முக்கோணப்பீடமே!**
**எண்கோண உயிரே வருக! வருக! வருக!**
**அகந்தை அகன்றிட, ஆணவமடங்கிட, கன்மம் தொலைந்திட,**
**அருளுக! அருளுக! அருளுக!**

## பிறணவ ஓங்காரத் தேவகுமாரக் காயந்திரி தோத்திரம்

**இருடியே! கணநாதனே! இசைத்தலைவனே! வசையொழிக்கும் வல்லவனே!**
**ஓங்காரத் துதிக்கையனே! ஒற்றைக் கொம்பனே! நாற்கையனே!**
**பானைவயிறனே! பிள்ளையாரே!**
**மானுடத் தலையனே! யானைக்கால் நாலுடையவனே!**
**யானை வயிறும் வாலுமுடையவனே! கணபதியே!**
**முக்கோணவடிவே! ஐங்கோணப் பொருளே! அறுகோண ஆற்றலே!**
**எண்கோணப் பீடமே! வினையின் நாயகனே! வினாயகா!**
**ஆறு, குளம், கால்வாய் ஏரி, முச்சந்தி நாற்சந்தி வழிபடுநிலைய**
**மூன்றில் வாழும் மூலமே!**
**தொடக்கத்தின் தொடக்கமே! ஆரம்பத்தின் ஆரம்பமே! முயற்சியின்**

முயற்சியே! மூலத்தின் மூலமே! கலைகளின் விளைவே!
இருடிவேதமே! அசுரவெதமே! சாமவேதமே! அதர்வன வேதமே! வேதப்பொருளே!
வானே! ஆகாயமே! விண்ணெ! விண்கடந்த பெருவெளியெ!
பிண்டமே! அண்டப் பிண்டமே! பேரண்டப் பிண்டமே!
அண்டபேரண்டப் பிண்டமே!
மலரொடு நெய்யில் வெந்தவை ஏத்திடும் படையலாகியதை ஏற்றுப் போற்றுக!
எண்ணி வேண்டுவன நிறைவேற அருளும் பராசத்திக் குமரா போற்றி!
அருளாடாமல் மருளாடாமல் விரும்புவர் அகத்தே நடனமிடும்
அருட்பெருஞ்சுடரே போற்றி
குட்டியும் குனிந்தும் தொப்பைக் கரணமிட்டும் முட்டிமடித்த பூசை விருப்பனே போற்றி!
அகரமே போற்றி! உகரமே போற்றி! ஐகாரமே போற்றி! ஓங்காரமே போற்றி! மகரமே போற்றி!
போற்றுபவர் பேணும் பிள்ளையாரே போற்றி! கணபதியே போற்றி!
விநாயகரே போற்றி!
நிலமே போற்றி! பூமியே போற்றி! மண்ணே போற்றி! நீளாவி ஆன்மா ஆருயிரே போற்றி!
தீயவை தீய்த்திடுக! மாயங்கள் மாய்த்திடுக! அயர்வுகள் அகற்றிடுக!
இயலாமை விரட்டிடுக! பொல்லாமை போக்கிடுக!
நலம் வழங்குக! வளம் வளர்த்திடுக! வலிமை காத்திடுக! வாழ்வின் துணையாகிடுக! வணங்கிப் போற்றுகிறோம்.



## முருகன் காயந்திரி

இளமுறியாக் கண்டத்தில் இருந்த பஃறுளி ஆற்றங்கரையில் முதன் முதலாகத் தென்மதுரை எனும் அருளாட்சி திருநகர் நிறுவி; இந்துமதத்தந்தை அரசாங்கப் பூர்வமாக அறிவித்தும்; தமிழ் மொழியை வளர்த்துக் காத்திடத் தமிழ் சங்கத்தை உருவாக்கியும் செயல்பட்டிட்டவரே ஆதிசிவனார் எனப்படுபவர். மூலப்பதினெண் சித்தர்களில் ஒருவரான இவரே முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியாக அருளாட்சி அரியணையில் அமர்ந்தார். இவர், இளமுறியாகண்டத்தின் தென் கோடியில் இருந்த தென் இமயமலையிலிருந்த மலையரசனின் மகளான பார்வதி எனப்படும் மலைமகளை மணந்து; அண்டபேரண்டத்துக்கும் இம் மண்ணுலகுக்கும் ஏற்பட்ட இணைப்பாக எல்லா வல்லமைகளும் பெற்ற அழகுமிக்க முருகன் என்ற ஆண்மகவைப் பயந்தார்.

இம் முருகன் செயற்கரிய பல செயல்கள் செய்து, அண்ட பேரண்டத்தவர்களின் தலைவனான இந்திரனின் மகளை மணந்தார். பிறகு இத்தமிழ் மண்ணுக்கே உரிய காதல் நெறிப்படி இன்றைக்கு இளமுறியாக் கண்டத்தின் மிஞ்சிய பகுதியாக இருக்கும் தமிழ் நாட்டில் வள்ளி மலை அரசன் மகள் வள்ளியைக் காதல் திருமணம் செய்து கொண்டார். இரு மனைவியோடும் இல்லறம் நடத்தியும் இவருடைய 32வது வயதிற்குள் இவருக்கு வாரிசு ஏற்படவில்லை. எனவே, இவர் அடுத்துப் பதினெண் சித்தர் பீடாதிபதியாக அருளாட்சி அரியணையில் அமர முடியாதென்பதால்; என்றென்றும் அருவுருவச்

நிலையில் இம்மண்ணுலகிலேயே இருந்து அனைவருக்கும் உதவுவதற்காகப் பதினெட்டுப் படை வீடுகளை அமைத்து நிறைந்தார். இவற்றில் ஆறுபடை வீடுகள் கடவுளர்க்கும், ஆறுபடை வீடுகள் சித்தர்களுக்கும் ஆறுபடை வீடுகள் மணீசர்களான மனிதர்களுக்கும் உரியவையாக ஆக்கினார்.

முருகன் படைவீடு அமைத்து இருப்பதால் அவர் மீது மெய்யான பத்தி பூண்டு உளமுருகி வழிபடுபவர்களுக்கு ஓடோடி வந்து உடனேயே உதவி செய்யும் கடவுளாக இருக்கிறார். ஒவ்வொருவரும் தமது வாழ்நாளுக்குள் ஆறுபடை வீடுகளில் ஒன்றிற்காவது நேரில் சென்று வழிபட்டு வரவேண்டும். ஆறுபடை வீடுகளுக்கும் சென்று வருவது சிறப்பு. அவரவர் விருப்பப்படி உள்ளூர்க் கோயிலில் உள்ள முருகனையோ, வீட்டிலேயே வைத்துள்ள முருகன் படத்தையோ அல்லது சிலையையோ வழிபட்டால் போதும்.

## முருகன் காயந்திரி மந்தரம்

ஓம் நாதாந்த விந்தாந்த ஓதங்கள் செயலாகுக!
ஓம் சித்தாந்த வித்துக்கள் பயிராகிப் பயனாகுக!
ஓம் ஆலமர் கடவுட் புதல்வ முருக காத்திடுக!
ஓம் வடிவேல வாழ்வியல் பேரின்பம் நல்கிடுக!
ஓம் சரவணபவா! குகா! வேலா! முருகா! கந்தா! நாமாகிடுக!

## முருகன் காயந்திரி மந்திரம்

ஏமமே! காமமே! சோமமே! வாமமே! சுவையாகுக!
ஓமமேநீ! ஓகமேநீ! யாகமேநீ! யக்ஞமேநீ! வேள்வியேநீ!
நீயே தவமாகுக! நீயே வேள்வியாகுக! நீயே சித்தமாகுக!
நீயே ஞானமாகுக!
நீயெ சீவதீரன்! நீயே அமுதம்! நீயே கற்பகத்தரு! நீயே பேரின்பம்!
பிறவியோகமே! பூர்வபுலன் சுவையே! தத்துவ வித்தே! சித்த நாதமே!
சிவச் செல்வனே! பார்வதி மகனே! குருவே! குகனே!
படைவீடோய்! தெய்வமகன் குறமகள் காதற் கொழுந!
சித்தாதி மூலமே! பத்தியே! சத்தியே! சித்தியே! முத்தியே!
பைந்தமிழ் தலைவ! போற்றுதலை ஏற்றருளுக! காத்திடுக!
அருட்பெருஞ்சுடரே! இருகதிரே! முத்தீயே! ஐந்தீ வேட்டல் பயனே!
ஆறுதலக்கு ஆறு முகத்தோய்! பாருக்குப் பதினெண் முகத்தோய்!
படையலும் பத்தியும் ஏற்றுப் போற்றிப் பேணுக!
ஓம் சரவணபவா! ஓம் சரவணபவா! ஓம் சரவணபவா! ஓம் சரவணபவா!
ஓம் முருகாவேலா! ஓம் கந்தாகடம்பா! ஓம் சேவற்கொடியோய்!
ஓம் மயில்வாகனனே!

# வள்ளிமலை இலங்கையா? இந்தியாவா?

**ஆதாரம் 1): திரு. ஜானகிராமன் ஐயாவின் கதிர்காமத்தில் வாசிக்கப்பட்ட நாடி வாக்கு.**
**ஆதாரம் 2): வரலாற்று ஆய்வாளர் N.S.K திருச்செல்வம் ஐயா எழுதிய நூல்கள்**

### இலங்கையின் தோற்றமும் கதிர்காமத்தின் புனிதமும்

இலங்கை என்பது லெமூரியா கண்டம் என்று அழைக்கப்படும் குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதியாகும். தமிழும் சைவமும் தழைத்தோங்கிய இக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள், ஒரு மிகச்சிறந்த நாகரிகத்தின் உச்சத்தைத் தொட்டிருந்தனர். அந்த நாகரிகத்தின் வெளிப்பாடாகவே தமிழும் சைவமும் விளங்கியது.

### உலகைக் காத்த கதிர்காமம்

முன்னொரு காலத்தில் இப்பேரண்டம் நீரால் அழிய நேரிட்டபோது, உலகைக் காக்கும் ஈசன் தென்திசை நீரால் அழிவதைக் கண்டு, வடதிசையில் உள்ள இமயமலைப் பகுதிக்குச் செல்ல முற்பட்டார். அப்போது அவர் முருகப்பெருமானிடமும் தம்முடன் வருமாறு அழைப்பு விடுத்தார். ஆனால் முருகப்பெருமான் பின்வருமாறு கூறி மறுத்துவிட்டார்: ‘‘நான் பிறந்து வளர்ந்ததும், எனது மணம் நடந்ததும், எனது மக்கள் வாழ்வதும் இதே இடத்தில்தான். இதுவே உலகின் இதயம் போன்றது. எனவே, இவ்விடம் அழிந்தால் உலகமே அழிந்துவிடும். கதிர்காமத்தில் இருந்தே இவ்வுலகை நான் காப்பாற்றுவேன்.”

முருகப்பெருமான் தனது வேலினால் கடல் நீர் சூழாதபடி தடுத்து, பூமாதேவியின் கரங்களால் நிலத்தைத் தூக்கிப் பிடித்தார். பூமித்தாயின் இளம் கைகளால் ஏந்திப் பாதுகாக்கப்பட்டதால் இவ்விடம் “இலங்கை“ எனப் பெயர் பெற்றது. இலங்கையின் வடிவம் ஒரு கை போலவே அமைந்திருப்பதும், முருகப்பெருமான் தனது வேலால் இதனைக் காத்ததும் இதன் சிறப்பம்சமாகும். கதிர்காமமும், அங்குள்ள வேலும் இருக்கும் வரை இவ்வுலகிற்கு அழிவில்லை என்பது ஐதீகம்.

### முருகன் - வள்ளி வரலாற்றுப் பாதை

முருகப்பெருமான் கதிர்காமத்தில் தான் வள்ளியம்மையைக் கண்டார். அங்கிருந்து உகந்தை மலை, செல்லக்கதிர்காமம் போன்ற பகுதிகளில் உலவி மகிழ்ந்தனர். பின்னர் வள்ளியம்மையைத் திருமணம் செய்ய திருத்தணி சென்ற முருகப்பெருமான், மணமுடித்த பின் மீண்டும் உகந்தை வழியாக கதிர்காமத்திற்கே வந்து நிலைபெற்றார். அன்று முருகப்பெருமான் இந்தியாவிலிருந்து உகந்தை வழியாக கதிர்காமம் வந்த அந்தப் பாதையையே, இன்றும் பக்தர்கள் “பாதயாத்திரை“ ஆகப் பின்பற்றி வருகின்றனர்.

### வள்ளிமலையும் கதிர்காமமும்

கதிர்காமத்தின் இந்த அற்புத வரலாற்றை அறிந்த சித்தர் ஒருவர், அங்கு வந்து தரிசனம் செய்தார். இந்த மகிமைகளை உலகிற்குச் சொல்ல விரும்பிய அவர், திருத்தணிக்கு அருகிலுள்ள வள்ளிமலையில் கதிர்காமத்தைப் போன்றே ஒரு கோயிலை அமைத்தார். முருகனும் வள்ளியும் திருமணத்திற்குப் பின் ஒரு குகையில் தங்கிவிட்டு பின்னரே கதிர்காமம் வந்தனர். அந்த இடத்தையே அவர் கதிர்காமமாகப் பாவித்து வழிபட்டார்.

மீண்டும் கதிர்காமம் செல்லும் வாய்ப்பு கிடைக்காததால், அந்தச் சித்தர் வள்ளிமலையிலேயே சமாதியானார். இன்றும் அவர் அங்கிருந்தே அருள்பாலிக்கின்ற இடமே வள்ளிமலையாகும். இவ்வாறு முருகப்பெருமான் மற்றும் வள்ளியம்மையின் முழுமையான வரலாறும் கதிர்காமத்தைச் சுற்றியே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முருகன் காயந்திரி மந்திறம்

**ஓம் அழகுரையாய்! அமுதலை நிலையாய்! அருள் நிலையாய்!**
**ஓம் நாதரையா! போதரையா! ஓதரையா!**
**ஓம் மறையுறையே! முறையுறையே! நெறியுறையே!**
**ஓம் வேதவடிவே! ஒலியொளியே! அருள்மருளே!**
**ஓம் கோலவடிவு காட்டிடுக! குவலயக் களிப்பு நல்கிடுக!**
**ஓம் மகிழ்வேயாகிடுக! நிறைவேயாகிடுக! பயனேயாகிடுக!**
**பதினெண் படைவீடுடையாய்! பாடுமடியவரைக் காத்திடுக!**
**இளமுறியா கண்ணடத்து இயவுளே! இறையே! காத்திடுக!**
**குமரிக் கண்டத்து அத்தாவே! அல்லானே காத்திடுக!**
**தொன் மதுரைத் தெய்வமே! தேவசேனாதிபதியே! காத்திடுக**
**பாண்டியனே! ஆண்டவனே! தேவகுமாரனே! காத்திடுக!**
**கந்தழியே! கொடிநிலையே! வள்ளியே! காத்திடுக!**

## காயந்திரியில் முருக வணக்கம்

**அண்டபேரண்டம் பேரண்டம் அண்டம் பிண்டம் வந்த சிவம்**
**கொண்ட மலைகள் ஓம் மோகம் போகம் பயந்த செல்வம்!**

**தென்னிமயம் தென்கங்கம் தென்யமுனம் தென்**
**பிறம்மபுத்திறம் தென்இந்தம் வளர்ந்த வீரம்!**

**முருகம் வள்ளியம் தெய்வானையம் சேர்ந்த குகம்**
**கந்தவடிவேலம் கடம்பழகம்!**

**மயிலும் சேவலும் வேலும் மறியும் மீனும்**
**பதினெண் படைவீடும் போதமான குருநாதம்!**

**முருகம்! முருகம்! முருகம்! முருகம்! முருகம்! முருகம்!**
**கந்தம்! கந்தம்! கந்தம்! கந்தம்! கந்தம்! கந்தம்!**
**கடம்பழகம்! கடம்பழகம்! கடம்பழகம்! கடம்பழகம்!**
**கடம்பழகம்! கடம்பழகம்!**
**குகம்! குகம்! குகம்! குகம்! குகம்! குகம்!**
**வேலம்! வேலம்! வேலம்! வேலம்! வேலம்! வேலம்!**
**சரவணபவம்! சரவணபவம்! சரவணபவம்! சரவணபவம்!**
**சரவணபவம்! சரவணபவம்!**
**நாமேயாகுக! நாமாகுக! நமகா!**
**நலமாகுக! நலமாகுக! நலமாகுக!**
**முருக வணக்கம்! முருக வணக்கம்! முருக வணக்கம்!**

இந்து வேத நாயகம்

## காயந்திரியில் முருகன் வாழ்த்து

**மூலப் பதினெண் சித்தர் பீட இளவரசே**
**மலைமகள் பாலக ஆதிசிவன் குமர**
**தேவ சேனாதிபதி தெய்வானைக் கொழுந**
**வள்ளி மணாள வடிவேலா அழகா**
**மயிலூர் செல்வ சேவற் கொடியோய்**
**பதினெண் சித்தர் பீடம் விடுத்தோய் சரவணபவா**
**பதினெண் படைவீடு கொண்டோய்**
**அருவாய் அருவுருவாய் உருவஅருவாய் உருவாய் வாழ்வோய்**
**வாழ்த்துதும் வாழ்த்துதும் வாழ்த்துதும்**
**வாழ்த்துதும் வாழ்த்துதும் வாழ்த்துதும்**
**காத்தருள்க! காத்தருள்க! காத்தருள்க!**
**காத்தருள்க! காத்தருள்க! காத்தருள்க!**

**இந்து மதத் தந்தை**

## முருகன் தோத்தரம்


**ஓம் மலரே! ஞாலமே! சுகமே! மகிழ்வே! குகனே!**
**ஓம் பிறப்பாதியே! வாய்மையே! உய்வே! துய்ப்பே! கந்தா!**
**ஓம் ஆரண்ய அரணே! பாரின்கோவே! தேமறைத் தீயே! முருகா!**
**ஓம் மூலப்பதினெண் சித்தர் பீட இளவரசே! பஃறுளிப் பாலகா!**
**ஓம் கடும்பகை நெடும்பகை கொடும்பகை முடிக்கும் வேலா!**
**தமிழே! அமுதே! அழகே! தவமே! காத்திடுக!**

## முருகன் தோத்திரம்

**சித்தாந்த நாதமே! தத்துவவித்தே! பன்மலையடுக்கத் தலைவ!**
**ஆலமர் கடவுட் புதல்வ! தொன் மதுரைத் தலைவி மகவே!**
**பஃறுளி குமரி; தாமிரபரணி வைகை; காவேரிக் காவலனே!**
**தேவாசுரப் போர் வென்றவனே! தெய்வானை வள்ளி மணாளனே!**
**நேமம் நீயே! நியமம் நீயே! நிடதம் நீயே! நிட்டை நீயே!**
**ஆகமம் நீயே! ஆரணம் நீயே! மீமாம்சை நீயே! சுருதி நீயே!**
**அகம்புறம் காப்பாயே! பிண்டமண்டம் காப்பாயே! தண்டமேற்பாயே!**
**அழுகை தொழுகை ஏற்பாயே! அரற்றல் புலம்பல் ஏற்பாயே!**
**கும்பிடல் வேண்டல் ஏற்பாயே! எம்மோடு புவனம் காப்பாயே!**
**ஓம் சரவணபவா நாமாகுக! ஓம் சரவணபவா நாமாகுக!**

ஓம் சரவணபவா நாமாகுக!
ஓம் முருகா நாமாகுக! ஓம் குகா நாமாகுக! ஓம் வேலா நாமாகுக!
ஓம் கந்தா நாமாகுக! ஓம் குமரா நாமாகுக!
ஓம் கொடிநிலை சித்தியாகுக! ஓம் வள்ளிநிலை சித்தியாகுக!
ஓம் கந்தழி நிலை சித்தியாகுக!

## நந்திதேவர் காயந்திரி மந்திரம்



நந்தியே! நந்திதேவரே! அதிகார நந்தியே!
நந்தியம் பெருமானே! நந்தி ஈசுவரரே!
மோனப்பொருளே! ஞானபீடமே!
தேவரன்றி பிறரும் உய்ய
பிறதோசத் திருநடனம் நிகழச் செய்த
மேலோனே! அன்பின் வடிவமே வாழ்க!

## குபேரன்
## காயந்திரி மந்தரம்



ஐயா உங்கள் கருத்து யாது ஐயா தாள் பணிந்து
பூவுலகின் அதிபதியே குபேரா தழைத்தெழு நீ!
என்னுள் வந்து இரண்டறக் கலந்திடு குபேரா!
தத் ரிம் க்லீம் குபேரா நமக!
பொருளுலக தடைகளை கட்டுக்களை
உடையுங்கள் குபேரா!
இவ்வுலகு இன்பங்களை நான் துய்ய அருள் புரிக!
இன்பங்கள் சிவசிவ வசிவசி என பெருகட்டும்!
செல்வங்கள் சிவாசிவா வாசிவாசி என வளரட்டும்!
என் வளங்கள் வளர செல்வங்கள் பெருக
முழுமையாக வந்தருளுக குபேரா!
வட திசைக்கு அதிபதியே
இலக்குமியின் பூவுலக வாரிசே வந்தடைக எம்முள்
எமக்குள் குருவாக குருவுக்குள் நானாக இருந்து
வளம் வலிமையடைய வழிகாட்டி வாழ்த்தி
வழித்துணையாய் வாழ்த்திடுங்கள்
வள்ளலே குபேரா நமக!

## மாயோன் காயந்திரி
**(நெடியோன்,**
**திருமால்,**
**பெருமால்)**



உலர்ந்த ஆடையணிந்து, பூசாவிதிப்படி தண்ணீரில் குழைத்த ஆறு வகையான பொருட்களையும் உரிய முறைப்படி உடலில் பூசி வழிபாடு செய்ய வேண்டும். பூசாவிதிப்படி அடிசில்கள், பலவகையான ஆகாரங்கள், புழுக்கள் (சுண்டல்கள்) முதலியன படைத்து வழிபட்டால் சிறப்பு.

## மாயோன் காயந்திரி மந்தரம்

ஓம் ஞாலநாயகச் சேவகம்; செந்தாமரைப் பாதம்; சித்தக் கோலம்;
விசும்பளந்த வடிவம்; கார்மேனி நாதம்; யோகத் தத்துவம்;
தேவக் காவல்பீடம்; ஆதி மூலம் பிறவி விருப்பம்; போக மோகம்;
தவப்பிண்டம்; அண்டம் பேரண்டம், அண்டபேரண்டம்;
மாயம் பிரமம், ஐம்பூத மூலம், ஆதி மூலம் தழைத்தெழுக!

## மயோன் காயந்திரி மந்திரம்

ஓம் நாராயணம், பிறமம், நாரதம், இந்திரம்;
ஓம் ஆதி மூலம், மாயம், மறை, வேதம்;
ஓம் திருமால், நெடியோன், முறை, சித்தம்;
ஓம் பெருமால், கோவிந்தம், நெறி நாதம்;
ஓம் அரங்கன், கருவூரன், காவலன், தழைத்தெழுக!

## மயோன் காயந்திரி மந்திறம்

ஓம் மறைப்பொருளே! முறைப்பொருளே! நெறிப்பொருளே! வேதப்பொருளே!
ஓம் நேமப் பொருளே! நிமயப் பொருளே! நிடதப் பொருளே! நிட்டைப் பொருளே!
ஓம் சுருதிப் பொருளே! ஆகமப்பொருளே! ஆரணப்பொருளே! மீமாசைப் பொருளே!
ஓம் மலைமகள் அண்ணனே! அலைமகள் கொழுநனே!
கலைமகள் மாமனே! திருக்குமரன் காவலனே!
ஓம் பதினெண் சித்தர் குழும, மறையடியானே!
விழுமியப் பேரின்பமே! தழைத்தெழுக!

## மயோன் காயந்திரி தோத்தரம்

**பத்துச் சக்கரத்தன் சுகமணி மகுடத்தன்; ஒளிர் குண்டலத்தன்;**
**அணிகலன் மேனியன்;**
**வண்ண ஆடையன்; நீலமேக வண்ணன்; ஆகாரவிருப்பன்;**
**கெளவீரிய மணி மாலையன்;**
**மாயோன், மாலவன், நெடியோன், பெருமால் திருமால்;**
**சீறும் பைந்நாகப் படுக்கையோன்; சங்குச் சக்கரத்தோன்;**
**திருமகள் நிலமகள் கொழுநன்; பிறப்பெடுக்கும் கருவூரான்;**
**ஓம் அரிஅறனே! ஓம் அரிஅறனே! ஓம் அரிஅறனே!**
**ஓம் அரிஅறனே! ஓம் அரிஅறனே!**
**திருவடி வாழ்க! திருவடி வாழ்க! திருவடி வாழ்க!**
**திருவடி வாழ்க! திருவடி வாழ்க!**
**(அரியறன் - பாட வேறுபாடு உண்டு)**

## மயோன் காயந்திரி தோத்திரம்

**ஓம் விழியே! ஓம் வழியே! ஆழியே! செழித்தெழுக!**
**ஓம் தோழமைத் தரமே! காவல் திறமே! செயல்படுக!**
**ஓம் மேழிச் செல்வம் செழிக்கும் பொழிலே! சுவையாகிடுக**
**ஓம் காத்தற் கடவுளே!, கண்கவர் எழிலே!, மாயோனே!, தழைத்தெழுக!**
**ஓம் கருவூறாரே!, திருமாலே!, பெருமாலே!, நெடியோனே! பயனாகிடுக!**
**மூலப்பதினெண் சித்தர்கள் தோன்றாத் துணைவனே!**
**கருவூறலேற்றவனே!, கருவூறானே!, சுவையாகிடுக!**
**ஓம் நாராயணா நாராயணீ! நாமேயாகுக! நமதேயாகுக! நமக்கேயாகுக!**

# இந்துவேத ஐயனார் காயந்திரி மந்தரம்



சோதியே அருட்பெருஞ்சோதியே!
சிங்க சோதியே! வேங்கை சோதியே!

களிறு சோதியே! கரடி சோதியே!
குதிரை சோதியே! மாடு சோதியே!

ஆடு சோதியே! குரங்கு சோதியே!
நாக சோதியே! கோழி சோதியே!


மயில் சோதியே! காக்கை சோதியே!
கழுகு சோதியே! மகர சோதியே!
ஏம சோதியே! காம சோதியே!
சோம சோதியே! வாம சோதியே!

சிவனின் கார்த்திகைத் திங்களில் தனிந்து புகைந்து
மாயோன் பிறமணின் மார்கழித் திங்களில் கனலாகி
இந்திரன் வருணனின் தைத்திங்களில் சுடராகிடும்
சோதிகளே! அருளுலக பொருளுலக இருளகற்றுக!
அண்டம் பேரண்டம் நீங்கிவந்த காவல்கார
தேவர்வேததைகளே! சோதிகளாய் தைத்திங்களில் சுடர்விடும்
தலைவர்களே! ஐயன்களே! ஐயர்களே! ஐயாக்களே!
ஐயப்பன்களே! ஐயனார்களே! சாத்தனார்களே! சாத்தாக்களே!
சாத்தய்யாக்களே! சாத்திரிகளே! சாசனப்பன்களே! சாந்தன்களே!
சேந்தன்களே! சிந்தன்களே! சந்தானங்களே! சத்தர்களே!
சத்துவர்களே! சித்தர்களளே! சுத்தர்களே! புத்தர்களே!
சாசுத்தான்களே! தேசுத்தாக்களே! நாசுத்தாக்களே! வாசுத்தாக்களே!
புறம்பணையான்களே! சாத வாகனன்களே! பாசண்ட சாத்தான்களே! பண்டாரங்களே!
அருளுலக பொருளுலக இருளகற்றும் சோதிகளே!
அரியகாவல் உரியகாவல் சீரியகாவல் பெரியகாவல்
நேரியகாவல் வீரியகாவல் ஊர்தோறும் வழங்கிடுக!
களவு கொலை கொள்கை கொடுமை
வஞ்சனை ஏமாற்று துரோகம் வீண்பழி
துயரெல்லாம் துடைத்து நீதிகாத்திடுக காத்தான்களே!
வாழ்க வாழ்க! வாழ்க வாழ்க! வாழ்க வாழ்க! வாழ்க வாழ்க!

## இந்துவேத ஐயானர் காயந்திரி மந்திறம்

அல்லி செந்தாமரை தழுவும் ஐயானர் வேதம்!
மல்லி முல்லை தழுவும் ஐயனார் நாதம்!
மருக்கொழுந்து தவணம் தழுவும் ஐயனார் சித்தம்!
மண்ணவள் வானவள் தழுவும் ஐயனார் போதம்!
விண்ணவள் விசும்பாள் தழுவும் ஐயனார் ஓதம்!
ககனத்தாள் ஆகாயத்தாள் தழுவுமட் ஐயனார் நேமம்!
பால் வெளியாள் பரவெளியாள் தழுவும் ஐயனார் நியமம்!
ஏழுபருவ பெண்கள் பூசிக்கும் ஐயனார் நிடதம்!
தருமுறை கருமுறை ஏற்கும் ஐயனார் நிட்டை!
திருமுறை குருமுறை விரும்பும் ஐயனார் நீதி!
அருள்தேடி ஊர்கடப்பதை மன்னிக்கும் ஐயனார் விதி!
ஊரில் தெற்கே வாழும் ஐயனார் மீமாம்சை!
ஊரார் பத்தியாடல் போற்றும் ஐயனார் ஆரணம்!
ஊரார் பத்திபாடல் மகிழும் ஐயனார் சுருதி!
ஐயனாக ஐயராக ஐயாவாக ஐயப்பனாக ஐயனாராக
சேந்தனாக அமுதனாக சேந்தனமுதனாக சாத்தனாக வேதியனாக
அறவியாய் உறவியாய் துறவியாய் மறவியாய் வாழும்
இந்துவேத காவல் தேவனே கணமே முத்தையாவே முனீசுவரனே
மலைமுதல் அலைகடல் வரை ஊரெல்லை சீராகக் காத்திடுக!
குதிரையானை மண்பாவை ஏற்றுக் காத்திடுக!
தீமிதி தீச்சட்டி ஏற்றுக் காத்திடுக!
வீரதவம் ஏற்பார் ஏலாதார் ஏற்றுக் காத்திடுக!
ஏழுபருவத்து ஓகியோகியே! மோகிபோகியே! இருடிமுனியே! காத்திடுக!
அன்றாடப் பூசை வேண்டாது ஆண்டுப் பூசையெ வேண்டுபவனே காத்திடுக!
காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக!

## மீனாட்சி வணக்கம்



ஓம் இந்து வேதக்கனியே! மீனாட்சியே அருட்பயனே!
பேரின்பமே! வணக்கம்!
ஓம் இந்துமதச் செல்வமே! மீனாட்சியே நாதசித்தமே!
ஓதபோதுமே! வணக்கம்!
ஓம் அருளாட்சிச் செல்வியே! மீனாட்சியே! சாத்தர! சாத்திர!
சாத்திறமே! வணக்கம்!
ஓம் ஞானக் கருவூலமே! மீனாட்சியே! தோத்தர! தோத்திரமே!
தோத்திறமே! வணக்கம்!
ஓம் முத்தமிழ்ச் செல்வியே! மீனாட்சியே! அமுதே!

அருளூற்றே! வணக்கம்!
இணக்கமாக நற்பேறுற அருளும் திருவே!
மீனாட்சியே! வணக்கம்!
வணக்குகிறோம் காத்திடுக!
வணங்குகிறோம் காத்திடுக!
வணங்குகிறோம் காத்திடுக!

## மீனாட்சி வாழ்த்து

ஓம் ஆலவாய் மதுரை! மாமூதூர்த் தெய்வமே! மீனாட்சியே!
திருவே! தருவே! கருவே! குருவே! வாழ்த்துகிறோம்.

ஓம் முக்கூடல் மதுரைப் பழம்பதிக் கடவுளே! அங்கயற்கண்ணியே!
அருவே! அருவுருவே! உருவருவே! உருவே! வாழ்த்துகிறோம்.

ஓம் முத்தமிழ்ச் சங்க மாமதுரை இறையே! சொக்கியே!
ஏமசோதியே! காமசோதியே! சோமசோதியே! வாமசோதியே!
வாழ்த்துகிறோம்.

ஓம் அருள்விளை ஆலவாய்த் திருநகர் எல்லாவே! அங்கயற்கன்னியே!
அருளாளர்! அருளாளி! அருளாடுநாயக! உயிரே! வாழ்த்துகிறோம்.

ஓம் மும்மதுரை கொண்ட தேவியே! அழகியே! இயவுளே!
மருளாளர்! மருளாளி! மருளாடு நாயக உய்வே! வாழ்த்துகிறோம்.

யாவும் நலமாக்கிக் காத்தருள்க! யாவும் நலமாக்கிக் காத்தருள்க!
யாவும் நலமாக்கிக் காத்தருள்க!

## மீனாட்சி காயந்திரி மந்தரம்

ஓம் மீனாட்சியம்! அயங்கயற்கண்ணியம்!
அங்கயற்கன்னியம்! பயனாகுக!

ஓம் சொக்கியம்! அங்கயற்கண்ணீசுவரம்!
அங்கயற்கன்னீசுவரம்! காவலாகுக!

ஓம் ஆலவாய் அழகியம் சொக்கீசுவரம்!
சொக்கநாயகிசுவரம்! சுவையாகுக!

ஓம் மீனாட்சியே! ஓக! யோக! மோக! போக!
அருட்பெருஞ்சோதியாகும்!

இந்துவாகும்! வேதமாகும்!
இந்துவேதமாகும்! இந்து மதமாகும்!

ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்!

## மீனாட்சி காயந்திரி மந்திரம்

ஓம் ஆலவாய்த் திருநகர் அங்கயற்கண்ணித் திரம்!
தாகவேகப்பசி தணிக்கும் செயலாகுக!

ஓம் தென்னிமயன் மகள் சொக்கித்திரம்! பிண்டம்! அண்டம்!
பேரண்டம்! அண்டபேரண்டம்! காக்கும் சத்தியாகுக!

ஓம் பஃறுளித் தொன்மதுரை தெய்வமீனாட்சித் திரம்!
ஓமஓக! யாகயக்ஞ!! வேள்வித்தவம்! சித்தியாகுக!

ஓம் தென்யமுனை! பிறம்மபத்திறத் தென்மதுரைத்தேவி!
அழகித் திரம்! கொடி நிலை! கந்தழி! வள்ளி! பத்தி! முத்தியாகுக!

இந்துவாகுக! இந்துவேதமாகுக!
இந்து வேதமதமாகுக! இந்துமதமாகுக!

ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்! ஓம்ஓம்!

## மீனாட்சி காயந்திரி மந்திறம்

ஓம் தெய்வ வைகை மதுரை! சொக்கழகித் திறம்!
பத்தியாய்! சத்தியாய்! சித்தியாய்! முத்தியாய்!
சித்து விளையாடலாய்! விளங்குக!

ஓம் தெய்வ வைகை மதுரை! மீனாட்சித் திறம்!
நான்மறையாகி! நான்முறையாகி! நாநெறியாகி!
நான்வேதமாகி! நலமெல்லாம் நல்குக!

ஓம் தெய்வ வைகை மதுரை! அங்கயற்கண்ணித் திறம்!
நேமமாகி! நியமமாகி! நிடதமாகி! நிட்டையாகி!
நீதியாகி! சோதியாகுக!

ஓம் தெய்வ வைகை மதுரை! அங்கயற்கண்ணித் திறம்!
ஆவியான்மா! ஆருயிரினை! சீவன்விளை! விதி! மதி!
கடந்த பயனாகுக!

ஓம் தெய்வ வைகை மதுரை! அங்கயற்கண்ணீசுவரத் திறம்!
இந்துவேதச் சுருதியாய்! ஆரணமாய்! ஆகமமாய்!
மீமாம்சையாய்! அருளளித்திடுக!

ஓம் தெய்வ வைகை மதுரை! அங்கயற்கன்னீசுவரத் திறம்!
ஞானக்கல்வியாய்! பூசை விதியாய்! தத்துவமாய்!
செயல்சித்தாந்தமாய்! இந்துமத வாழ்வாகிடுக!

## ஈசுவரி காயந்திரி

இது 243 வகைச் சத்திபீடங்களுக்குரிய அம்மன்களையும், ஆறுவகைப்பட்ட ஈசுவரிகளையும் முழுமையாக வருணித்து அருள்வேண்டி ஓதிடும் பூசைமொழியாகும். முத்தி ஓம்பல், ஐந்தீ வேட்டல், விளக்குப் பூசை முதலிய சோதி வழிபாடுகளிலும் ஆத்தாளை வேண்டி ஓதி அருள்பெற உதவும் பூசாமொழி இது. இதை அடிப்படையாகக் கொண்டே அம்மனைப் பற்றிய எல்லாப் பூசைமொழிகளும் தோன்றின என்று குருப்பாரம்பரியம் சிறப்பாகக் குறிக்கின்றது.

சத்தி வழிபாட்டில் வாலை, கன்னி, குமரி எனும் மூவகைப் பெண்டிர்களையும் அம்மனாக உருவகப்படுத்திச் செய்யக்கூடிய சத்தி பூசைகளுக்கு இது சிறப்பாகப் பயன்படும். அடுக்களைச் சாத்திறம், மடநூல், படையல் சாத்திறம் முதலியவைகளின்படி அந்தந்த அம்மன்களுக்கேற்பப் படையல்களைத் தேர்ந்தெடுத்துப் படைத்தால் சிறந்த பயன்களை விரைவில் அடையலாம். பூசாவிதிப்படி ஈர உடையுடனும், தண்ணீர் விட்டுக் குழைத்து திருநீறு, குங்குமம், திருமண், மை, சாந்து, சந்தனம் முதலியவற்றை உரிய இடங்களில் உரிய முறைப்படி அடுத்தடுத்துக் கட்டுக்கட்டாக உடலில் பூசி வழிபாடு செய்தால் சிறந்த பயன் கிடைக்கும். இது அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு தரத்தினருக்கும் உரியது.

## ஈசுவரி காயந்திரி வணக்கம்



**பதினெண் சித்தர் இந்துமத ஆறு அங்கமாய்**
**நின்றிலங்கி அண்டபேரண்டமாளும் ஈசுவரியெ!**
**ஈசுவரியே! சர்வேசுவரியெ! பரமேசுவரியே!**
**மகேசுவரியே! ஆதிஈசுவரியே! அனாதிஈசுவரியே!**

**ஈசுவரியே! வான்மகளே! காற்றாயினியே!**
**காளியே! மாரியே! மண்மகளே!**

**ஈசுவரியே! சிவனே! மாயோனே! பிறமண்ணே!**
**சூரியனே! திங்களே!**

**இந்துவே வேதமே மதமே இந்துவேதமதமே**
**இந்துமதமே ஈசுவரியே!**

**வணங்குகிறோம் என்றென்றும் நல்லருள்**
**வழங்கி அனைவரையும் காத்திடுவாயாக!**

## ஈசுவரி காயந்திரி வாழ்த்து

**இந்துவாகி! வேதமாகி! மதமாகி! இந்துவேதமாகி!**
**இந்துவேதமதமாகி! இந்துமதமாகி நிற்கும் ஈசுவரியே!**

**சத்தியாகி! சர்வசத்தியாகி! பராசத்தியாகி! மகாசத்தியாகி!**
**ஆதி சத்தியாகி! அனாதிசத்தியாகி! நிற்கும் ஈசுவரியே!**

**அத்திரமாகி! சாத்திரமாகி! சூத்திரமாகி! தோத்திரமாகி!**
**நேத்திரமாகி! வேத்திரமாகி! நிற்கும் ஈசுவரியே!**

**கருவாசகமாய், குருவாசகமாய், தருவாசகமாய்,**
**திருவாசகமாய், அருள்வாசகமாய், மருள்வாசகமாய் நிற்கும் ஈசுவரியே.**

**தமிழாகி! கதிரவனாகி! நிலவாகி! காற்றாகி!**
**கனலாகி! புனலாகி! நிற்கும் ஈசுவரியே!**

**வாழ்த்தி வழிபடுகிறோம்! என்றென்றும்**
**பயன்மிகு இன்பம் நிறைந்து காத்து அருளுக.**

## ஈசுவரி காயந்திரி மந்தரம்

**ஓம் ஈசுவரி நாயகி நாதம், சித்திரக் கோலப்பாதம்**
**ஓம் சர்வேசுவரி நாயகிச் சித்தம், முத்திரைக் கோல வடிவம்**
**ஓம் பரமேசுவரி நாயகிப் போதம், ஞானக் கோலத்தோற்றம்**
**ஓம் மகேசுவரி நாயகி ஓதம், பேரின்பக் கோல மூலம்,**
**ஓம் ஐயீசுவரி நாயகி வேதம், சித்தி மூலத் தளம்**
**நாமாகுக! நமகா சுவையாகுக சுவாகா! தாதாச்சுது ததாசுத்து.**

## ஈசுவரி காயந்திரி மந்திரம்

**ஓம் அனாதிசத்தி ஈசுவரி! மறையாந்தக் காவல்பீடம்!**
**ஓம் ஆதிசத்தி சர்வேசுவரி! முறையாந்தச் சேவகம்!**
**ஓம் போதிசத்தி பரமேசுவரி! நெறியாந்தப் பூடகம்!**
**ஓம் ஓதிசத்தி மகேசுவரி! வேதாந்த ஆடகம்!**
**ஓம் சோதிசத்தி ஐஈசுவரி! சித்தாந்த ஏடகம்!**
**ஒலியொளி மோகம்! ஒலியொளிப் போகம்!**
**ஒலியொளி ஞானம்! ஒலியொளித் தவம்!**

## ஈசுவரி காயந்திரி மந்திறம்

**கோலமயில் வடிவம்! நீலக்கடல் தோற்றம்!**
**பனிமலைத்தேகம்! ஈசுவரி ஆரணம்!**
**பால் வண்ணமேனி நாதம்! பவள இதழ்க் கோலம்**
**முத்துப்பல் ஆக்கம்! சர்வேசுவரி ஆகமம்!**
**கார்மேகக் கூந்தல் போதம்! உயிர் மூக்கின் பாடகம்!**
**எழிற்காதின் ஆடகம்! பரமேசுவரி நேமம்!**
**சங்குக் கழுத்தின் ஓதம்! உயர் மருப்பின் ஏடகம்!**
**மின்னலிடையின் ஊடகம்! மகேசுவரி நியமம்!**
**வாளை மீன் காலின் சித்தம் செந்தாமரைப் பாத போகம்!**
**அன்னநடையின் மோகம் பராசத்தி வேதம்!**
**மகாசத்தி பீடம்! ஏந்தரீகத்தடம்! தாந்தரீகமடம்!**
**மாந்தரீகப்பாடம்! யோகபோகத் தவவடம்!**
**ஓக ஓமம்! போக மோகம்! யாக யக்ஞம்!**
**வேள்வித் தவம்! பூசை ஞானம்!**

## அங்காள பரமேசுவரி காயந்திரி மந்தரம்



ஓம் ஆதி சத்தியே! அங்காளபரமேசுவரியே!
மூன்று கண்களும், நான்கு கரங்களுமுடையவளே!
இரண்டு கைகளில் பாசக்கயிறும், சூலமும் கொண்டவளே!
இரண்டு கைகளில் கபாலமும், டங்கமும் கொண்டவளே!
மகர குண்டலமும், பத்ர குண்டலமும் அணிந்தவளே!
சர்வ ஆபரணமும் பூண்டவளே!
அன்னையே! தாயே! ஆதிபராசத்தியே!
வெண்பட்டாடை உடுத்தி, காளையின் மேல்
வீற்றிருந்து, அருள் வழங்கும்
குங்கும நிறமேனியாளே!
தழைத்தெழுக! தழைத்தெழுக! தழைத்தெழுக!

## அங்காள பரமேசுவரி காயந்திரி மந்திரம்

ஓம் ஆத்தாள் தேவி, அங்காளபரமேசுவரியே!
ஆதி சிவனை வேண்டி சுடலையில் தவம் புரிபவளே!
நாள், கோள், மீன் பாதிப்புகளற்றி!
தீய சத்திகளை அழித்து, எங்களை காத்தருள்க!
காத்தருள்க! காத்தருள்க!
ஓம் பராசத்தி நமசிவாய போற்றி!
ஓம் நமசிவாய பராசத்தி போற்றி!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!



## வயிரவி காயந்திரி மந்திரம்

ஓம் மகா மாயையே ஆதிவயிரவியே!
கலைகள் யாவும் அருளுபவளே
ஓம் ஐம் வயிரவியே தழைத்தெழுக!
முதல் நடு இறுதி என மூன்றாகத் திகழுபவளே
மனத் தாமரையில் விளங்கும் மகா சக்தியே!
பிறம்மண் திருமால் உருத்திரன் மூவரின்
வல்லமை சத்தியே ஆதி வைரவியே
தழைத்தெழுக! தழைத்தெழுக! தழைத்தெழுக!

## மாசாணி அம்மன் காயந்திரி மந்தரம்

ஓம் மாசாணி அம்மனே! அனாதி சிவன்களுடன் எழுந்தருளியவளே!
ஓம் மாசாணி அம்மனே! 243 சத்திகளில் ஒருவளாக இருப்பவளே!
ஓம் மாசாணி அம்மனே! படுத்த நிலையில் இருந்து
இப்பார் முழுதும் அருளாட்சி புரிபவளே!



ஓம் மாசாணி அம்மனே! கருவுரியாக குருவுரியாக தருவுரியாக
திருவுரியாக செயல்படுபவளே!

ஓம் மாசாணி அம்மனே! பிண்டங்கள் அண்டங்கள்
பேரண்டங்கள் அண்ட பேரண்டங்கள் காப்பவளே!

ஓம் மாசாணி அம்மனே! தீக்குளித்தேவியெ!
அரக்கர் அசுரர் அடக்குபவளே!

ஓம் மாசாணி அம்மனே! எட்டுத்திசையும்
அருளாட்சி புரிபவளே!
எங்களையும் காத்திடுக!

## மாசாணி அம்மன் காயந்திரி மந்திரம்

ஓம் மாசாணியே! பேய்ச்சியே! இயக்கியே! பிறம்மசத்தியே!
ஓம் வானவளே! விண்ணவளே! விசும்பாளே! ஆகாயத்தாளே!
ஓம் ககனத்தாளே! பால்வெளியாளே! பரவெளியாளே!
ஓம் பத்திரியாளே! போத்திரியாளே! புத்திரியாளே! முத்திரியாளே!

ஓம் சீவன் முத்திரியாளே! அருவ சித்திரியாளே! அருவுருவ சித்திரியாளே!

ஓம் உருவ சித்திரியாளே! உருவ அருவ சித்திரியாளே!
நாத சித்திரியாளே! போத சித்திரியாளே!

ஓம் நாடு காக்கும் கடவுளே! மாசாணி அம்மனே! அனைவரின்
அல்லல் நீக்கிக் காத்திடுவாயாக!

வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்! கும்பிடுகிறோம்!
பரவுகிறோம்! பூசை செய்கிறோம்!
பத்தர் படையல் ஏற்று பாதுகாப்பாயாக!

## கொல்லிப்பாவை காயந்திரி மந்திரம்

**ஓம் கொல்லிமலை நாயகியே தழைத்தெழு நீ!**
**பாவை உருகொண்டவளே**
**காத்தருளுக எங்களை!**
**எட்டுக்கரங்கள் கொண்டு**
**சூலம் தாங்கி நிற்கும் தாயே**
**தடைகள் தகர்த்தெறிக!**
**தீமைகள் யாவும் நசிநசி! மசிமசி! என விலகட்டும்!**
**நன்மைகள் யாவும சிவசிவ! வசிவசி! என வளரட்டும்!**
**அரக்கல் தலைவியே தழைத்தெழு நீ!**
**காப்பாகுக நீ! அரணாகுக நீ!**
**ஓம் ரீம், க்ரீம், க்லீம் இச்சா சத்தியே நமக!**
**ஓம் ரீம், க்ரம், க்லீம் கிரியா சத்தியே நமக!**
**ஓம் ரீம், க்ரீம், க்லீம் ஞான சத்தியே! நமக!**
**ஓம் சித்தி தரும் வித்தே!**
**கொல்லிப்பாவையே தழைத்தெழுக நீ!**
**வல்வில் ஓரியை தடுத்தாட் கொண்டவளே**
**செல்வம், வளம், நலம், பெருகட்டும்!**
**வெட்டவெளி கருவறை கொண்டவளே**
**பகைவர்களை அழித்திடுக!**
**உடைத்திடுக கட்டுக்களை!**
**கட்டுக்கள் தெறிக்கட்டும்!**
**தடைகள் எறியட்டும்!**
**முழுமையடையச் செய் எங்களை!**
**சித்தர் நெறிச் செல்வியே**
**தீ பாய்ந்து தெய்வமானவளே**
**பிறம்ம குண்டலியே நமக!**
**காப்பிடுக, சுவையாகுக, பயனாகுக!**

## பகலவதி (பகவதி) காயந்திரி மந்தரம்



**ஓம் வாமகோடிப்பீடம்! வேத மூலம்! சித்த நாதம்!**
**ஆகமப்பாடம்! பகலவம்!**

**பத்தி ஓம்! சத்தியோகம்! சித்திமோகம்! முத்திபோகம்! சூரியம்!**

**மறை விளக்கம்! சுருதி வடிவம்! ஆரண நோக்கம்!**
**மீமாம்சைப் பாக்கம்! நாராயணம்!**

ஐம்பூத நுட்பம்! அருவம்! அருவுருவம்! உருவ அருவம்! உருவம்!

பகலவதியாம்! ஓமம்! யாகம்! யக்ஞம்! தவம்!

கார்மேக வண்ணம்! மின்னல் தோற்றம்! எழில் ஆக்கம்!
செயல் ஊக்கம்! மாயப்பாக்கம்!

மாயம்! பிறமம்! வருணம்! இந்திரம்! இறமம்!

தாயே நீயே! ஆண்டவராகி! தெய்வமாகி!
தேவதையாகி! கடவுளாகி!

தழைத்தெழுக! அனைவரும் பிழைக்க அருளிடுக! காத்திடுக!

ஓம்ஓம்ஓம்! ஓம்ஓம்ஓம்! ஓம்ஓம்ஓம்! ஓம்ஓம்ஓம்! ஓம்ஓம்ஓம்! ஓம்ஓம்ஓம்!

## வராகி காயந்திரி மந்திரம்

ஓம் திருமகளின் வடிவே! வராகி தேவியே!
வராக முகமும்! ஆறு கரங்களுடையவளே!
இரண்டு கரங்களில் சங்கு! சக்கரம்! கொண்டவளே!
இரண்டு கரங்களில் உலக்கை! கலப்பை! ஏந்தியவளே!
அபய முத்திரை! வரத முத்திரையோடு!
அருள் வழங்குபவளே!
அங்கவியல் இலக்கணங்கள் அனைத்தும்
ஒருங்கே அமையப்பெற்றவளே!
அணிமணி மகுடம்! தரித்தவளே!
வராக மூர்த்தியின் துணையானவளே!
வராகி தேவியே! வாழ்த்துகிறோம்!
வணங்குகிறோம்! ஏற்றுக் காத்திடுக!
ஓம் நமோ நம நாராயண நாராயணீ நமக!
ஓம் நமோ நம நாராயண நாராயணீ நமக!
ஓம் நமோ நம நாராயண நாராயணீ நமக!



# காமாட்சியம்மன் காயந்திரி தோத்திரம்



ஓம் காமாட்சி தேவியே
243 சத்தி பீடங்களில் ஒருவளாக இருப்பவளே!
ஓம் காமாட்சி தேவியே
ஏமகோடி, வாமகோடி, சோமகோடி பீடங்களில்
காமகோடி பீடமாக விளங்குபவளே!
ஓம் மந்தர, மந்திர, மந்திற, மாந்தர,
மாந்தரீகச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் தந்தர, தந்திர, தந்திற, தாந்தர, தாந்தரீகச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் எந்தர, எந்திர, எந்திற, ஏந்தர, ஏந்தரீகச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்விச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் பூசை, தவம், ஞானம் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் மறை, முறை, நெறி, வேதச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் நான்மறை, நான்முறை, நான்நெறி, நான்வேதச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் சித்த, நாத, ஓத, போதச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் நேம, நியம, நிடத, நிட்டை, நீதிச் சத்தியே! காமாட்சிதேவியே!
ஓம் சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைச் சத்தியே! காமாட்சிதேவியே!
ஓம் அத்தர, அத்திர, அத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் சாத்தர, சாத்திர, சாத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் சூத்தர, சூத்திர, சூத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் தோத்தர, தோத்திர, தோத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் நேத்தர, நேத்திர, நேத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் வேத்தர, வேத்திர, வேத்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் ஐந்தர, ஐந்திர, முந்திறச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் இச்சா, கிரியா, ஞானச் சத்தியே! காமாட்சி தேவியே!
ஓம் யுக, யுகமாய் அருளாட்சி புரிபவளே காமாட்சி தேவியே!
ஓம் கச்சி ஏகம்பம் ஏகாம்பரநாதரின் துணைவியே காமாட்சி தேவியே!
ஓம் பிறைசூடிய மணிமகுடச் செல்வியே காமாட்சி தேவியே!
ஓம் பதினெண் சித்தர்களின் தோன்றாத் துணையே காமாட்சி தேவியே!
ஓம் அண்டம், பேரண்டம், அண்டபேரண்டம் காத்திடும் காமாட்சி தேவியே!
இப் பார் முழுவதும் தெய்வத்தமிழால் அருளாட்சி அமைந்திட அருள்புரிக!
ஓம் நமசிவாய நமச்சிவாய பராசத்தி போற்றி!
ஓம் பராசத்தி நமசிவாய நமச்சிவாய போற்றி!
ஓம் நமச்சிவாய, பராசத்தி நமசிவாய போற்றி!

## கலைமகள் காயந்திரி மந்தரம்



ஓம் நான்முகன் நாயகியே! கலைவாணியே!
கலைகள் யாவும் தழைத்திட அருளுக!
ஞானாம்பிகையே சிரசுவதியே!
கல்வி நலம் வழங்கிடுக!
ஓம் அகர உகர மகரமே போற்றி!
வெண்தாமரை மலர் கொண்டு வணங்குகிறோம்!
ஓம் அரீம்! உரீம்! மரீம்!
தழைத்தெழு! தழைத்தெழு! தழைத்தெழு!
தழைத்தெழுக! சற்குரு வழங்கிடுக!
அருட்குரு வழங்கிடுக! வாக்குகள் பலித்திட அருளுக!
வீணையும் ஏடும் தாங்கி நிற்பவளே! அருட்சுடரே!
அனைத்தும் பயனாகிட அருளுக! காத்திடுக!

## மகா இலக்குமி காயந்திரி மந்திரம்



ஓம் இலக்குமியே நமக!
திருமால் திருமால்பில் வாழ்ந்திருக்கும் சத்தியே!
தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ!
தழைத்தெழுநீ தழைத்தெழுநீ!
செந்தாமரை விருப்பமுடன் ஏற்று
இவ்வுலக இன்பங்களும்! செல்வங்களும்!
வளங்களும்! நலங்களும்! தந்தருளுக! எழுந்தருளுக!
ஓம் பாற்கடல் அமுதே! இவ்வுலகு செழிக்க!
அருளுக அருவியென வேண்டியவை
விருப்பமுடன் தந்தருளுக!
ஓம் ஐம்! க்ளீம்! ஐசுவரியே தழைத்தெழுநீ!
செல்வ வளம் பெருகிட அருளுக!
ஓம் ரீம்! க்ரீம்! க்றீம்! க்லீம்! க்ளீம்!
பொருளாதாரத் தடைகளை அகற்றிடுக!
உலகியல் பேரின்பம் நல்கிடுக!
செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னையே!
தாயே! இலக்குமியே! தழைத்தெழுநீ!
எங்கள் தடைகள் காப்புகள் உடைத்தெறிய அருளுக!
செல்வத்துக்கு அதிபதியே தனம் நல்குக.

## காளி காயந்திரி
### (நெருப்பு மகள், நெருப்புத் தலைவி, நெருப்பு ஈசுவரி)

பதினெண் சித்தர்கள் பிற அண்டங்களிலிருந்து அழைத்து வந்த (243) இருநூற்று நாற்பத்து மூன்று வகையான சத்திகளுள் காளிதேவி ஓர் அசர சத்தியாவாள். அநுபவத்தில் இவள் அருள் எளியது. காளிதேவியைக் கோயிலில் சென்றுதான் பத்தி செய்து சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுவது மரமாக இருக்கிறது. அரச நிலைக்குரியவர்கள், குரு பீடமாக இருப்பவர்கள் மட்டுமே தங்கள் இருப்பிடத்திலேயே காளியை வைத்து வழிபடும் மரபு உள்ளது. பொதுவாகக் காளியைக் கும்பிடுவது ஆபத்து என்று யாரும் கும்பிட மாட்டார்கள். சித்தர்கள் வழிந்த குருவையே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாகக் கொண்டிட்டால் எவ்வித ஆபத்தும் வராது; அருளும் சித்தியும் எளிதில் கிடைக்கும்.

குறிப்பு : அத்தி, இண்டம்புதர், இச்சி, பலா, நாவல்... முதலியவற்றை வழிபடுவதே காளியை வழிபடுவதாகும். அதாவது இம்மரத்தடிகளில் திரிசூலத்தை ஊன்றியோ, கல்லை ஊன்றியோ கும்பிட்டால், அது காளியை கும்பிடுவதாகிவிடும். ஏழு கன்னிமார் கோயிலில் எட்டாவதாக ஒரு திரிசூலமோ, கல்லோ தனியாக இருக்கும். இது காளிதேவியின் பீடம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறப்புக் குறிப்பு : எந்தக் குலதெய்வமாக இருந்தாலும், குலதெய்வக் கோயிலில் ஏதாவது ஓரிடத்தில் திரிசூலத்தையாவது, கல்லையாவது, சிலையையாவது காளிதேவியாக அமைத்து வழிபட்டதால்தான் எல்லாப் பாதுகாப்பும் பயனும் முழுமையாகக் கிடைக்கும்.

### காளி காயந்திரி மந்தரம்



ஓம் காளி தேவியே! காயமே! வித்தைகளின் விளை நிலமாக்கிடுக!
தாயே, நீயெ, தீயாகி மகிழ்ந்திடுக! அருளிடுக!
என்னைத் துன்புறத்துவனவற்றை பிறப்பற்றன வாக்கிடுக!
அனாதி நீயே! ஆதி நீயே! பாதி நீயே! மீதி நீயே!
வாழ்த்துகிறோம், வணங்குகிறோம், ஏற்றிடுக, காத்திடுக.

### காளி காயந்திரி மந்திரம்

பசிய தலை மாலை பூண்டு ஈசனை வென்றவளே!
வசிய மண்டையோட்டு மாலை பூண்டு அண்டம் காப்பவளே!
நசியத் தீமைகளை தீய்க்கும் குருதிப்பலி விருப்பத்தாளே!
ஆத்தாளே! அம்மையே! அன்னையே! தாயே சத்தியே!
மருதக்காளியே! அருவக்காளியே! உருவக்காளியே அருவுருவக்காளியே!
கருக்காளியே! குருக்காளியே! தருக்காளியே! திருக்காளியே! சூலத்தாளே!

பாராங்கு சத்தாளே! தாமரையாளே! அருட்கையாளே!
இருகையே நாலாகி! ஆறாகி! எட்டாகி! பத்தாகி! பன்னிரண்டாகி!
பதினாளாகி! பதினாறாகி! பதினெட்டாகி! இருபதாகி! முப்பத்திரண்டாகி!
முப்பத்தாறாகிடும்! கோலமயிலே சிங்கம் அமர்பவளே முக்கண்ணளே
கட்டழகியே! கருமேனியளே! அருட்சுடரே! வருமையொளித்திடு!
தடையுடைத்திடு! சிந்தை காத்திடு! நெஞ்சு போற்றிடு! வெற்றி வழங்கிடு!

இந்த மந்திரத்தால் மனம் திரப்படும்; மன வலிமை பொலிவடையும்; சிந்தை தெளிவடையும்; சிந்தைத் தெளிவு செயலில் வலிமையைத் தரும். மனிதன் திரத்தால் வாழ்வில் உரமும் தீரமும், வீரமும், பிடிவாதமும் தன்னம்பிக்கையும், அஞ்சாமையும், எதிரிகளைச் சமாளிக்கும் ஆற்றலும், நிதான அறிவும், பிறரை அடக்கியாளும் ஆளுமையும், உண்மையும் ஆண்மையும், தோற்ற மிடுக்கும் எடுப்பும்... விளைந்திடும்.

## காளி காயந்திரி மந்திறம்

ஓம் அண்டக்காளியே! பிண்டக்காளியே! பேரண்டக்காளியே!
அண்டபேரண்டக்காளியே!
ஓம் ஏககாளியே! அனேககாளியே! மகாகாளியே! பராசரக்காளியே!
ஓம் மறைக்காளியே! முறைக்காளியே! நெறிக்காளியே! வேதக்காளியே!
ஓம் சித்தக்காளியே! நாதக்காளியே! போக்காளியே! ஓதக்காளியே!
ஓம் சுருதிக்காளியே! ஆரணக்காளியே! ஆகமக்காளியே! மீமாம்சைக்காளியே!
ஓம் நேமக்காளியே! நியமக்காளியே! நிடதக்காளியே! நிட்டைக்காளியே!
ஓம் ஓமக்காளியே! ஓகக்காளியே! யாகக்காளியே! யக்ஞக்காளியே! வேள்விக்காளியே!
ஓம் அனாதிசத்தியே! ஆதிசத்தியே! பாதிசத்தியே! மீதிசத்தியே!
ஓம் ஆங்காரியே! ஊங்காரியே! ஓங்காரியே! சங்காரியே!
விழிச்சியுறு நீ எழிச்சியுறு நீ! செழிச்சியுறு நீ! மலர்ச்சியுறு நீ!
வளமாகு நீ! வலிவாகு நீ! பொலிவாகு நீ! நலமாகு நீ!
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்திறசத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்திரசத்தி;

அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்தர சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தாந்தர சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தாந்தரீகசத்தி;
ஓம் அளீம்! இளீம்! உளீம்! எளீம்! ஐளீம்!
ஓம் காளீ செயசெய! ஓம் காளீ! செயசெய!
ஓம் சாளீ செயசெய! ஓம் சாளீ செயசெய!
ஓம் பாளீ செயசெய! ஓம் பாளீ செயசெய!

ஓம் நாளீ செயசெய! ஓம் நாளீ செயசெய!
ஓம் மாளீ செயசெய! ஓம் மாளீ செயசெய!
ஓம் வாளீ செயசெய! ஓம் வாளீ செயசெய!
ஓம் றீறீ! ஓம் றீறீ! ஓம் றீறீ! ஓம் றீறீ!
ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!
ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!
ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

இம் மந்திறத்தால் காளியைக் கண்டு தேவையான சத்தி, சித்தி, முத்திகளைப் பெறலாம். பெரும்பாலும் மந்திறவாதிகளாகப் பொருளுலக ஆசையுடையவர்களே இம்மந்திறத்தைச் சித்தி செய்து போகியாக வாழுவார்கள். எனவேதான், குருவழியின்றித் தாமே இம்மந்திறத்தைச் சித்தி செய்து மோகி, போகி... என்று வாழுபவர் நிலை தடுமாறும் போது கொலையுண்டு அழிவர்.

காளிதான் போர்கால, போர்கோலத் தேவியாக எப்போதும் இருக்கிறாள் என்பதால்; காளியை வணங்குவதன் மூலம்தான் நிலையான தற்காப்பையும், எதிரிகளை முறியடித்துப் பாதுகாப்பையும் பெற்றிடலாம். எனவே, யாரும் ஆத்தாள் காளிதேவியைக் கும்பிடுவதற்கு அஞ்சக்கூடாது.

## மாரி காயந்திரி

**(நீர் மகள், நீர்த் தலைவி, நீர் ஈசுவரி)**

புற்று, நாகம், வேப்பமரம், தென்னம்பாளை, புளியமரம்... இவைதான் சிறப்பாக மாரியம்மனின் வடிவமாகக் கருதப்பட்டு வழிபடப்படுகின்றன. மாரியம்மனை யார் வேண்டுமானாலும் எந்த இடத்தில் இருந்து கொண்டும் வழிபடலாம். நாட்டு வழக்கில் மாரியம்மனை அழைக்க உடுக்கையடித்து மாரியம்மன் தாலாட்டு என்ற பாடலைப் பாடுவது மரபு. இப்படிப் பாடுவதால் நோய்நிலைகளும், எல்லாவகையான சோதனை நிலைகளும் அகலும். மாரியம்மனிடம் பூசை செய்து சத்தி சித்திகளைப்பெற வேண்டுபவர்களுக்காக மாரி காயந்திரிப் பூசாமொழிகள் இங்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அருள்நிலையில் காளிதேவி காட்டாற்று வெள்ளம் போன்றவள் என்றால், மாரி தெளிந்த நீரோடை போன்றவள். இருந்தாலும், காளியம்மனில் கருக்காளி, குருக்காளி, தருக்காளி, திருக்காளி என்று நான்கு வகை இருப்பது போலவே; மாரியம்மனில் கருமாரியம்மன், குருமாரியம்மன், தருமாரியம்மன், திருமாரியம்மன் என்று நான்கு வகை உண்டு.

## மாரி காயந்திரி மந்தரம்



முத்தியே! பந்தபாசக் கௌமாரியே! அணிமணிமகுடக் குருதி விருப்பாளே!
சித்தியே! தடக்கையாளே! அமுதே! மலர் மாலையாளே நாற்கையாளே!
சத்தியே! ஒன்பது சுடர் முடியாளே! ஐந்நாகக் குடையாளே! அருட்கையாளே!
பத்தியே! மூன்றாம் பிறையாளே! தாயாதீதப்பாசமே! தவப்பீடமே! அருட்பெருஞ்சுடரே!
தீமைதீய்க்கும் தீச்சட்டியாளே! பூக்குளியலாய்த் தீக்குளிக்கும் தீக்குழித்தேவியே!
பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக!
பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக!

(பாட வேறுபாடு - அருட்பெருஞ்சோதியே)

## மாரி காயந்திரி மந்திரம்

ஓம் கருவுரியே1 குருவுரியே! தருவுரியே! திருவுரியே! மகிழ்க!
ஐம்பூதவிதியே! வீரியே! பூசாகாரியே! பயங்கரியே! பிறைசூடியே!
தேவதேவீ! மழைமகளே! பிறமவடிவே! விசும்பே! மாரியே!
அரிசிட்ட கூழ்; கருவாடு முட்டை; அகத்திக்கீரை முருங்கைக் காய்;
பக்குவமாய்ச் சமைத்த படையலே!
சுற்றமொடு நற்றவமாய் நல்குகிறோம் ஏற்றுக் காத்திடுக!
பருவமழையே! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ!

## மாரி காயந்திரி மந்திறம்

ஓம் தத்துவவித்தே? முழுநிலவே! பருவமழையே! பூக்குழிப் பெருநெருப்பே!
சித்தவித்தே! மகேசுவரியே! அரக்கரழித்த மாரியே! மாதமுப்பொழிவே!
தித்திக்கும் அமுதத் தேமொழியே! சீறிய நாகமணிமகுடச் செல்வியே!
பத்தர் படையல்; ஒன்பதுவகை நீர்க்குடம்; தீச்சட்டி, காவடி ஏற்றருளுக!
தாயே! அம்மையே! அன்னையே! ஆத்தாளே! அருளளித்திடுக!

## மாரி காயந்திரி தோத்தரம்

**தேவீ! சாது நீ! மகாசத்தி நீ! பெரியநாயகி நீ! புண்ணியம் நீ!**
**தத்துவாதீதம் நீ தத்துவாந்ததீதம் நீ! நாதாதீதம் நீ! நாதாந்ததீதம் நீ!**
**போதாதீதம் நீ! போதாந்தீதம் நீ! மோதாதீம் நீ! மோதாந்ததீதம் நீ!**
**சித்தாதீதம் நீ! சித்தாந்ததீதம் நீ! ஓதாதீதம் நீ! ஓதாந்ததீதம் நீ!**
**அதீம், உதீம், மதீம், நதீம்! வதீம்!**
**கெளதீம், செளதீம்! தெளதீம், பெளதீம்! ஔதீம்!**
**ஆங்காரியே! ஊங்காரியே! சங்காரியே! பங்காரியே! ஓங்காரியே**
**தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!**
**தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!**
**அழைக்கிறோமுனையே! அழைக்கிறோமுனையே! அழைக்கிறோமுனையே!**
**அழைக்கிறோமுனையே! அழைக்கிறோமுனையே!**
**பிழைத்திட அனைவர்க்கும், மண்ணுலக அமுதாம், நீர்வழங்கு தேவியே!**
**வெப்பகற்றிடு தப்பகற்றிடு! வெப்பகற்றிடு! தப்பகற்றிடு! வெப்பகற்றிடு! தப்பகற்றிடு!**
**வெப்பகற்றிடு! தப்பகற்றிடு! வெப்பகற்றிடு! தப்பகற்றிடு!**
**தாயே! மாரித்தாயே! மண்ணுலகு செழிக்க, அமுத நீரளிக்கும் தாயே! வாழிய நீ!**
**அண்ட பேரண்டம் கடந்து; மூலப் பதினெண் சித்தர்களோடு**
**வந்த சத்திகளுள் ஒருத்தியே; நீ வாழி!**
**வாழிவாழி! வாழிவாழி! வாழிவாழி! வாழிவாழி! வாழிவாழி!**

## மாரி காயந்திரி தோத்திரம்

**தண்ணீரின் வடிவே; தகைப்பெருஞ்செல்வமே! மாரியே!**
**நூற்றெட்டுத் திருப்பதியும் பசுமை பெற்றிட; பயன்பெற்றிடச் செய்பவளே!**
**இருநூற்று நாற்பத்து மூன்று சத்திபீடமும் இன்புறச் செய்பவளே!**
**ஆயிரத்தெட்டுச் சிவாலயமும் அமுதுபெற்றிட, அருளூற்றாய் விளங்குபவளே!**
**பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள்**
**குளுமையுறவருள்பவளே!**
**மண், வான், விண், ஆகாயம் ஈரமுடனிருக்க வருள்பவளே!**
**தாக மோக ஓக வேக யோக போகம் வென்றவளே!**
**தானாகத் தோன்றியவளே!**
**அருவத்தாளே! உருவத்தாளே! அருவுருவத்தாளே!**
**உருவ அவருவத்தாளே! சித்தர் மகளே! கடவுளே!**
**வேப்பிலைக்காரியே! மஞ்சள்நீராளே! திரிசூலத்தாளே! தீச்சட்டியாளே! முக்கொம்பாளே!**
**திருக்கலயமே! கற்பூரச்சோதியே! பூமணமே! நறுநாற்றமே! பேரின்பமே!**
**காளியொடு மாரியே! ஈசுவரியொடு மாரியே! திருமகளொடு மாரியே!**
**கலைமகளொடு மாரியே! பகவதியொடு மாரியே!**
**ஐஈசுவரியே! ஐசுவரியே! ஐயாளம்மனே! அங்காளம்மனே! ஆண்டிச்சியே!**
**பத்தர் வணங்கும் முத்திச் சித்திச் செல்வியே! மாரியே!**

அடாங்கமே! இடாங்கமே! உடாங்கமே! எடாங்கமே! ஒடாங்கமே!
அங்கமெலாம் நிலம்பரப்பித் தொழுகிறோம்! அழுகிறோம்! அரற்றுகிறோம் !
மாரியே! கொடைத்தெய்வமே! குளிர்நிலவே! கற்பகத்தருவே! அமுதே!
தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!
தண்ணளியால் காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக!

பின் குறிப்பு : அகவாழ்க்கை இன்பங்கள், நோய்நொடிகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், தனிமனிதத் தற்காப்பு, குடும்பத் தற்காப்பு... முதலியவைகளை நீர்த்தலைவியாகிய மாரியம்மனை வழிபடுவதன் மூலம் பெற்றிடலாம்.

## குரு மாரியம்மன் காயந்திரி மந்திரம்

பதினெண் சுடர்முடியுடையாள்! ஒன்பது நாகக் குடையடையாள்!
இரண்டு கைகளால் மடியில் குழந்தையேந்தியவள்!
இரண்டு கைகயால் வீணைமீட்டிசைப்பவள்!
இரண்டு கைகளில் ஏடும்சூலமும் ஏந்தியவள்!!
இரண்டு கைகளில் உடுக்கையும் அக்கினியும் தாங்கியவள்!
இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் கொண்டவள்!
குருவானாள், குருக்களானாள், குருமாரானாள்,
குருதேவரானாள், குருபீடமேயானாள்!
குருமாரியே! கருநிலையாகிறாள்! குருநிலையாகிறாள்!
தருநிலையாகிறாள்! திருநிலையாகிறாள்!
இடக்கால் பீடமாக்கியவள், வலக்கால் செந்தாமரை கொண்டவள்,
அருளாட்சிக்காக மாரியப்பன், மாரியம்மன் செயலுறச் செய்பவளிவளே!
அருட் பயிரின உயிரின் செழிப்பால் அருளாட்சி காப்பவளே
குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி!
குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி!

## மூலப் பதினெண் சித்தர்களின் ஒன்பது கோள்களின்
### (நவக்கிரகங்கள்) காயந்திரிப் பூசாமொழிகள்

### வியாழன் காயந்திரி

பூசாமொழிப் புத்தகம் 1986இல் வெளியிடப்பட்டு அசுர குருவான சுக்கிராச்சாரி யாருக்கும் (வெள்ளி 4, 5, 6.3.1988 வரை) தேவ குருவான வியாழ பகவானுக்கும் (வியாழன் 14 முதல் 18.6.1988) வரை திருச்சி காவிரிக்கரையில் அருளாட்சி அமைப்புப் பணியில் பங்குகொள்ள அழைப்பு விடுத்து உரிய பூசை செய்யப்பட்டு முழு நிறைவான வெற்றி கிடைத்திட்டது. எனவே, இந்த இரு குருவையும் சித்தி செய்து கொள்ள

விரும்புவர்கள் இதில் வெளியிடப்பட்டிருக்கும் பூசாமொழிகளைக் கூறி அவரவர் வட்டார வழிபடு நிலையங்களில் உள்ள ஒன்பது கோள்களையும் (நவக்கிரகங்களையும்) 8 முதல் 48 தடவை சுற்றி வந்து வழிபட்டாலே சிறுகச் சிறுகப் பயன்கள் விளையும். குறுகிய காலத்தில் விரைந்து நிறைந்த பயன்களைப் பெற விரும்புகிறர்கள் சித்தர் வழிவந்த குரு வழியாகப் பயிற்சி முயற்சிகளைப் பெறுவது நல்லது.

## வியாழன் காயந்திரி மந்தரம்

தாயேயாகி, ஆயகலைகள், ஏயகலைக்ள அருளுவீர், அருவியென;
ஏமகாம, சோமவாம, ஒளிச்சுடரே! குருவே! இயக்கமாகுக!
ஓகபோக, மோகயோக, வழியே! வழித்துணையே! செழித்தெழுநீ!
சுருதி ஆரண ஆகம மீமாம்சைச் சத்தியே! அசுரர் அரக்க நிலை வென்றுதா நீ!
தழைத்தெழு நீ! பிழைக்க அருளு நீ! வாழ்த்தி அழைக்கிறோம் உழுவலன்பாலே!
குருவாழ்க! குருவே விழியாகுகு! குருவே வழியாகுக!
குருவே துணையாகுக! குருவே எல்லாமாகுக!
குருவே நீ! பேரருள் புரிந்து கருவாகுக! தருவாகுக! திருவாகுக!
குருவே நீ! கும்பிடேற்பாயாக! தொழுகையேற்பாயாக!
பூசையேற்பாயாக! வழிபாடேற்பாயாக!
ஓம் சச்சிதானேந்மே நாமாகுக! ஓம் சற்குருவே நாமாகுக!
ஓம் நற்குருவே நாமாகுக, ஓம் தேவகுருவே நாமாகுக!

அருளாட்சிக்காக ஆதிசிவனாரின் குரு பாரம்பரியப்படி அப்பயே தரப்பட்டிருக்கிறது.
( பாட வேறுபாடு - எல்லாவாகுக என்று 'வா' என்ற எழுத்து சில ஏடுகளில் 'மா' என்ற எழுத்துக்குப் பதிலாகக் காணப்படுகின்றது. 'அல்லா' 'எல்ா' என்ற கடவுள் நிலையில் 'குரு' போற்றப்படுவதாக 'எல்லாவாகுக' என்ற சொல் பயன்படலும் சிறப்பே)
- சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிப்பிள்ளை)

## வியாழன் காயந்திரி மந்திறம்



குருவே! வியாழனே! பகவானே! தேவாசிரியனே!
மஞ்சள் வண்ணத்தானே! தினை நெய்யுளுந்து நாட்டத்தானே!
உடல் நலம் கல்விச்செல்வம் புகழ்வாரிசு அருளுபவனே!
நெஞ்சம் சிந்தை கலந்து மஞ்சள் பூவால் வழிபடுகிறேன்;
தஞ்சம் புகுந்திட்டேன், எனையேற்றிப், போற்றிப் பேணிடுவாயா!
அவிர்பலியேற்றுப் புவியின்பமெல்லாம் எந்தனுக்கே தந்தருள்வாயாக!
நீயே! அறனாகுக! அரியாகுக! பிறமணாகுக!
தாயனையாய் சேயெனைக் காத்து அருள்புரிவாயாக!
ஊழ்வினை, ஆள்வினை, சூழ்நிலை, விதி கடந்த கல்வி தந்தருள்வாயாக!

(பாட வேறுபாடு இந்த மந்திறத்தில் 7வது வரியில் அறனாவாயாக, அரியாவாயாக, பிறமணாவாயாக என்று 'ஆகுக' என்ற சொல்லுக்குப் பதில் 'ஆவாயாக' என்ற பாட வேறுபாடு ஏடுகளில் உள்ளது.

- சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிப்பிள்ளை

## சனீசுவரக் காயந்திரி
(ஒன்பது கோள் நாயகன் வழிபாடு)

பிறப்பியலில் (சாதகம்) எந்தக் கோள் பாத்திருக்கிறது என்பது தெரியாதவர்களும் பயன்படுத்திடும் வண்ணம் பதினெண் சித்தர்களின் பூசாவிதி நூலில் ஒன்பது கோள் நாயகன் வழிபாடு என்ற பூசாவிதி வழங்கப்பட்டிருக்கிறது. ஈசுவரனுக்குச் சமமாக அருளாற்றல் பெற்றவர்களுள் சனீசுவரர் விண்வெளியியல் ஆட்சியிலும், முனீசுவரர் மண்ணுலகியல் ஆட்சியிலும் எத்தகைய மாற்றங்களையும் திருப்பங்களையும் தங்களது விருப்பம் போல் உருவாக்கும் ஆற்றலுடையவர்கள். உரிய தமிழ்மொழி எழுத்துக்களாலும் சொற்களாலும் ஒலியெழுப்பிப் படையல்களுடன் பூசை செய்து விண்வெளிக் கண்காணிப்புச் சத்திகளைத் தங்களுக்குச் சாதமாக்கிக் கொள்ள உதவுவதே சனீசுவரப் பூசை. இந்தச் சனீசுவரரின் பூசாவிதி மிகத் தெளிவாக அனைத்துவிதமான நாள், கோள், மீன் இராசிப் பாதிப்புக்களுக்கும் பரிகாரமாகச் சொல்லப்படுகின்றது.

சனீசுவரப் பூசையைச் சித்தர் வழிவந்த குருவழியாக, குருவின் வாழ்த்தோடும், அருளூறு பூசனைப் பொருளோடும் செய்தால் விரைந்து பயனளிக்கும்.

## சனீசுவரக் காயந்திரி மந்தரம்



ஒன்பது கோள் நாயகனே சனீசுவரா! தழைத்தெழு நீ! வாழியவே!
சனீசுவரா பகவானே! அரையா வித்தைகளின் மகவே! பங்கு வழங்கு!
ஆதாயம் தீயில் மகிழவே! உன்னோடு மந்தநிலை! அந்தி நிலை!
பிரச்சினைகள் அற்றிடட்டும்! காக்கையேறு கருநாக ஈசுவரனே!
கவலையகற்றிக் காத்திடுக.

சனியின் பாதிப்புள்ளவர்கள் அன்றாடம் மாலையில் எள்விளக்கேற்றி அல்லது மாமிசக் கொழுப்பெண்ணெயில் விளக்கேற்றி சனீசுவரக் காயந்திரி மந்தரம் 48 முறை கூறிச் சனீசுவரனை வேண்டிக் கொள்ள வேண்டும். இம்மந்தரத்தால் அருளுலகில் நல்ல செல்வாக்குப் பெறலாம். பொருளுலகத் தொல்லைகளையெல்லாம் போக்கிக் கொள்ளலாம்.

**சனீசுவரத் தோத்தரம்**

**ஏ ஏ ஏ ஏமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**வா வா வா வாமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**கா கா கா காமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**சோ சோ சோ சோமசோதிச் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**நீலககல்லாய் நிலைத்த அருள்வழங்கு சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**எள்ளும் எண்ணையும் எரித்ததுமே எழுந்தருளும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**மைக்கறுப் பழகால் வையம் காக்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**மூன்றாம் பிறையமர்ந்து முத்திதரு சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**முனிவர் இருடி அக்கினி காக்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**அருவுருவ இயவுளாகித் தீமைகள் தீர்க்கும் சனீசுவரா! தோத்தரம் ஏற்றிடுக!**
**பிண்டம் அண்டம் பேரண்டம் அண்டபேரண்டம் காத்திடுக!**
**தேடிடும் செல்வம் பலவும் தேடிவர அருளுக!**
**எமவாதை அச்சமகற்றி நீடித்த ஆயுள் அருளுக!**
**ஒன்பது கோள் நற்றுணையும் உதவியாகிட அருளுக!**
**பன்னிரண்டு இராசிகள் பக்கத் துணையாகிட அருளுக!**
**இருபத்தேழு விண்மீன்கள் தோதாகக் காத்திட அருளுக!**
**அருளூறு பூசைகள் சித்திக்கச் சத்தி அருளுக!**
**இருளகற்றுக! இன்னல் தவிர்த்திடுக! நாமேயாகுக!**
**நாதியாதி, ஆதிநாதி, நாயகனே நலமே நல்குக!**
**அச்ச, மாச்சாரிய ஆச்சரிய வேதனைகளைத் துச்சமாக்கிடுக!**
**ஒன்பது கோள் நாயகனே! உமக்கு வழங்குகிறோம் தோத்தரம்.**
**பயிரின உயிரினங்கள் தழைக்கக் காப்பு பல பயந்திடுக!**
**சனீசுவரா! நீயே! சுவையாகுக! சுவையாகுக! சுவையாகுக!**
**சனீசுவராய நமச்சிவாய பராசத்தி நாராயணா நாமாகுக!**
**சனீசுவராய நாள்கோள் மீன இராசி சித்திமுத்தி நாமாகுக!**
**சனீசுவராய அருட்பயிரே! விளைந்திடுக! விளைந்திடுக! விளைந்திடுக!**
**ஓம் சனீசுவரா! அனைத்தும் பிழைத்திட நல்லாட்சி நிகழ்த்துக!**
**ஓம் சனீசுவரா! அத்தனையையும் காத்திட வல்லாட்சி நிகழ்த்துக!**
**ஓம் சனீசுவரா! எத்துணையையும் பேணிட அருளாட்சி நிகழ்த்துக!**
**ஓம் சனீசுவரா! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ!**
**ஓம் சனீசுவரா! தோத்தரமேற்றிடு! தோத்திறமேற்றிடு! தோத்திரமேற்றிடு!**

**அங்கவியல் சாத்திற அடிப்படைகள் முப்பத்திரண்டாவது போல்; விண்வெளியுலகின் ஆட்சிக்கு இலக்கியமும் இலக்கணமுமாக, உயிரும் உயிர் மெய்யுமாக, சொல்லும் பொருளுமாக, சத்தியும் சிவமுமாக, இரவும் பகலுமாக உள்ள சனீசுவரன் முப்பத்திரண்டு தோத்தர வரிகளால் பூசை செய்யப்படுவதே பதினெண் சித்தர்கள் கண்ட பூசாவிதி. இதை இசையோடு சொல்லலாம்; எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கும் இடத்திலிருந்தபடிச் சொல்லலாம்; பாதிப்பு**

இல்லாதவர்களும் கூறலாம். சொல்லும்போது எள்ளை ஒரு துணியில் முடிந்து நல்லெண்ணையில் தோய்த்து அகல்விளக்கில் வைத்து எரித்திட வேண்டும். இது எல்லாவிதமான பாதிப்புகளையும் அகற்றும்; எல்லாவிதப் பாதுகாப்புகளும் கிடைக்கும்.

இம்மண்ணுலகினை ஆளுகின்ற ஒன்பது கோள்கள், பன்னிரண்டு இராசிகள், இருபத்தியேழு விண்மீன்கள் ஆகிய 48 விண்வெளிச் சத்திகளுக்கும் தனித்தனியாகக் காயந்திரிப் பூசாமொழிகளைப் பதினெண் சித்தர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

பொதுவாக இச்சூரிய காயந்திரிப் பூசாமொழிகளைக் காலையிலும் மாலையிலும் ஓதுவதுதான் மரபு. சிறப்பாக எப்பொழுது நீராடினாலும் ஈர உடையுடன் ஒரு முறையாவது கூறினால் மிகவும் நல்லது. சூரியனை மட்டுமே தங்களுடைய வழிபடு கடவுளாக தேர்ந்தெடுப்பவர்கள் நீராடிய உடையை நன்கு பிழிந்து ஈர உடையாகக் கட்டிக்கொள்ள வேண்டும். திருநீறு, குங்குமம் முதலிய பொருட்களை முறைப்படிப் பூசிக் கொண்டு 4, 8, 16, 32, 64 என்ற எண்ணிக்கைகளில் ஓதலாம். ஓதும்போது அவரவா் வசதி வாய்ப்புப்படி ஊதுபத்தி காட்டியோ, கற்பூரம் ஏற்றியோ, வெற்றிலை பாக்கு பழம், மற்ற படையல் பொருட்கள் (மூங்கிலரிசி, காப்பரிசி, உயிரினக் கொழுப்பு எண்ணெய், அவரைப்பயிறு) முதலியன படைக்கலாம். சிறப்பான படையல் பொருட்கள் சர்க்கரைப் பொங்கல், மாவிள்ககு, பால் முதலியன. சூரிய காயந்திரி ஓதுவதற்கு முன்போ, ஓதிய பின்போ ஓதிக் கொண்டே வில்வ இலை, துளசி இலை வாயில் போட்டுக் கொள்ளலாம். முன்னோர் வழிபாடு செய்யும்போது எள்ளும் தண்ணீரும் கலந்து சூரிய காயந்திரி கூறிக்கொண்டே சூரியனைப் பார்த்துத் தெளிக்க வேண்டும்.

காக்கையர், காகபுசுண்டர், சோழியாயி, சோழமாதேவி, ஆதவன், கதிரவன், பகலவன், பகவன், வெய்யோன், வெயிலான், எல்லா, எயிலான், ஞாயிறு, அவிர்சுடர், விரிசுடர், கந்தழி, எல்லப்பன், எல்லம்மா, சோதி, தழலோன், அழல்மேனியன், ஆரியன்... முதலிய பல சொற்கள் சூரியனைக் குறிப்பனவாக இருக்கின்றன.

### சூரிய காயந்திரி மந்தரம்



சுர்ரெனும் சூரியே! விரிசுடரே! ஆரியா!
பாசக்கரையா! ஆன்ம வித்தே மகேசா!
மகிழ் விதிக்கு அரையா! தீயே நீயாகி!;
தன்னோடுவரு ஆதியந்தப் பிரச்சினை யற்றிடு!
நாமாகுக! சுவையாகுக! பயனாகுக! காத்திடுக!

**சூரிய காயந்திரி மந்திரம்**

**தத்துவ வித்தே! சூரியே! சத்தாகிச் சித்தாகிச் சிவமாகிடுக!**
**எத்தகையாரும் பத்தியால் முத்தியுறத் தழைத்தெழு நீ!**
**காத்திடுக! சுவையாகிடுக! நலமாகிடுக! நாமேயாகிடுக!**
**அத்தனையையும் விழிச்சியாக்கிடுக! எழிச்சியாக்கிடுக! செழிச்சியாக்கிடுக!**
**ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்!**

**புதன் காயந்திரி மந்தரம்**



**ஓம் புதனே! வித்தைக்கு அதிபதியே நமக!**
**கல்வி, ஞானம், தொழில் சிறக்க அருளுபவனே! தழைத்தெழு நீ!**
**பச்சைநிற ஆடையணிந்து வழிபடுகின்றோம்!**
**செல்வங்கள் சிறக்க காத்தருள்க!**

**செவ்வாய் காயந்திரி**

**செவ்வாயின் பாதிப்பு மிகுந்த பேராற்றல் உடையது என்பதால், பொதுவாக மக்கள் நலமடைவதற்காக இந்தச் செவ்வாய்க் காயந்திரி மந்தர மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செவ்வாய்ப் பாதிப்புள்ளவர்கள் வழிபாட்டு நிலையங்களிலுள்ள ஒன்பது கோள்களை (நவக்கிரகம்) 48 முறை சுற்றி வரும்போது இக் காயந்திரியைக் கூறி வணங்க வேண்டும். ஆனால், விரைவில் செவ்வாயின் பாதிப்பிலிருந்து விடுபட வேண்டுமென்றால், பூசை செய்யும் நேரங்களில் பச்சை வண்ண ஆடை உடுத்த வேண்டும். செவ்வாய்க்குப் பிரியமான படையல் பொருட்களைப் படைக்க வேண்டும். சித்தர்கள் வழிவந்த குருவிடம் நேரில் அருள் பெற்றும், அருளூறு பூசனைப் பொருட்கள் பெற்றும் இப்பூசாமொழிகளை ஓதிப் பூசைகளைச் செய்திட வேண்டும். ஒரு மண்டல காலம் வணங்கிடச் செவ்வாய்ப் பாதிப்பு சிறுகச் சிறுகக் குறைய ஆரம்பிக்கும். மற்றவை குருவழிக் காண்க.**

**செவ்வாய் காயந்திரி மந்தரம்**



**ஓம் அங்காரகனே! அடக்க ஒடுக்க தேக்கவீக்க ஆட்சியானே!**
**செவ்வியறிந்து பணிகிறோம் செவ்வாயே! பவழப்பீடத்தானே! பாதுகாப்பாயாக!**
**கருகுநிலை, சருகுநிலைக் கவலைகளனைத்தும் அகற்றிக் காத்திடுக! அருள் வழங்கிடுக!**
**செவ்வாயே! நீயே! தாயும் தந்தையுமாகிச் சேய்களைப் பேணிடுக! வளர்த்திடுக!**
**ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி!**
**ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி!**

## செவ்வாய்க் காயந்திரி மந்திரம்

**மூன்றாவது கோளே! குருதி வண்ணத்தானே! வாழ்க நீ!**
**செவ்வாயே! பவழப் பீடத்தானே! சிவப்புப்பூ விருப்பத்தானே!**
**அங்காரகனே! கடலை எண்ணை, சோளம், மொச்சை அவிர்ப்பலியுடையவனே!**
**பாசத்தார் நலம், சொத்துவளம், சிந்தையுரம், நெஞ்சப் பொலிவு வழங்குக.**
**பணிகிறோம்; சத்து, சித்து ஆனந்தத்தால் அணிபெற்றுத் திகழ அருளிடுக!**
**நல்லானே உன்வல்லமையால்; தேய்வு, மயக்கம், இழப்புத் தந்திடுக!**
**நோற்றிடும் நற்றவங்களை ஏற்றுப் போற்றியே பேணிடுக எங்களை**
**ஒன்பது கோள்களின் தாளே! நாளே! வாழ்நாள் நீண்டிட அருளுக!**
**ஓம்நசிநசி! ஓம்நசிநசி! ஓம்நசிநசி! ஓம்நசிநசி! ஓம்நசிநசி!**
**ஓம்மசிமசி! ஓம்மசிமசி! ஓம்மசிமசி! ஓம்மசிமசி! ஓம்மசிமசி!**

குறிப்பு

**அங்காரகனை ஏவல் கொள்ளும் இம்மந்திரத்தை சித்தி செய்திடச் சித்தர் வழிவந்த குருவழிக் காண்க.**

## திங்கள் காயந்திரி

**(திங்கள், நிலவு, சந்திரன்)**



**திங்களின் ஒளிக்குத்தான் எல்லாவகையான உயிர்ப்பு ஆற்றல் இருக்கின்றன. அதாவது கரு உற்பத்திச் சத்தி, கரு வளர்ச்சிச் சத்தி, கனி, பூ, எல்லாவகை பயிரினங்களும் முதிர்ச்சி தருதற்குரிய ஆற்றல், புத்துயிர்ப்பு ஆற்றல், அருளணுக்களை உலாவரச் செய்யும் ஆற்றல், அருளுலகத்தவர்களின் எல்லாவகையான செயல்பாடுகளுக்கும் தேவையான ஆற்றல், அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள், உருவ அருவங்கள் முதலிய அனைத்துக்கும் தேவையான எல்லாவிதச் சத்திகளையும் வழங்கல்... முதலியன எல்லாவகையான படைப்பாற்றல்களும் திங்களின் ஒளிக்கு இருக்கின்றன.**

**எனவேதான், அருளுலகத்தின் அனைத்து வகையான படைப்புப் பொறுப்புகளையும் ஏற்றுள்ள சந்திரகுலத்தவரான சித்தர் கருவூறார்கள் பாரம்பரியமாகத் தங்களுக்கு மட்டுமே யுரியதாகத் தந்தர, தந்திர, தந்திற, தாந்தர, தாந்தரீகப் பூசை முறைகளைக் காத்து வளர்த்து பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களால் படைக்கப்படும் அனைத்தையும் காக்கக்கூடிய சூரிய குலத்தவரான காகபுசுண்டர்கள் அருளுலகத்தைப் போற்றிப் பாதுகாத்துப் பேணி வளர்த்துக் காக்கும் பொறுப்பை ஏற்றவர்கள் என்பதால்; அவர்கள் சூரிய வெளிச்சத்தில் செய்யப்படக்கூடிய மந்தர, மந்திர, மந்திற, மாந்தர, மாந்தரீகங்களைத் தங்களுக்கே உரியவைகளாகப் பாரம்பரியமாகக் காத்து வருகிறார்கள். பகல், இரவு எந்த நேரத்திலும் அருளூறு பாதுகாப்பு ஏதுக்களைத் தயாரிக்கப் பயன்படும்**

**எந்தரம், எந்திரம், எந்திறம், ஏந்தரம், ஏந்தரீகம், தவம், பூசை, வேள்வி எனும் எட்டும் திங்கள் குலத்திற்குரிய கருவூறார்களாலும், சூரிய குலத்திற்குரிய காக்கையர்களாலும், மற்ற அருளாளர்களாலும் செயலாக்கப்பட்டு வருகின்றன.**

**திங்களின் படைப்பாற்றலின் அடிப்படையில்தான் ஏறத்தாழ எல்லாத் திருநாள்களும், திருவிழாக்களும் இரவில் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக 243 சத்தி பீடங்களுக்கும் உரிய 48 வகைக் கருவறைகள், 48 வகை வெட்டவெளிக் கருவறைகள், 48 வகை வழிபாட்டு நிலையக் கருவறைகள் ஆகிய அனைத்திலும் இரவில்தான் எல்லாத் திருநாள்களும், திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன. சிவாலயங்களில் கூடப் பருவபூசை என்பது நிலவை அடிப்படையாக்க கொண்டுதான் முழுநிலவு நாளிலும், மூன்றாம் பிறை நாளிலும் சிறப்பான பூசைகள் செய்யப்படுகின்றன.**

## திங்கள் காயந்திரி மந்தரம்

**வணக்கமே! திங்களங் கிழவனே! பகலவன் பதிலியே!**
**மகாதேவத் திருமுடிப்பீடமே! திரிபுரமெரித்தோய் பாசச் சேயே!**
**பச்சரிசி, துவரை, தேங்காயெண்ணை, ஊதாப்பூ நயப்போயே!**
**இணக்கமாக அனைத்து மீந்தே இரவு பகலாய்ச் சேவிக்கிறோம்!**
**தாய்நலம், அறிவு, ஓகம், ஞானம், சற்குரு தருவாயே!**
**வானவனே தழைத்தெழுநீ நாங்கள் பிழைக்க அருளுநீ!**

குறிப்பு :

**நிலவு தோன்றிய பிறகு; ஈர ஆடை உடுத்தி; அல்லது தலையோடு தண்ணீரில் மூழ்கி நீராடி (தலையில் தண்ணீர் ஊற்றி நீராடியோ) அப்படியே ஈரம் புலராத ஆடையுடன் நிலவைப் பார்த்து உடல் வலிவுக்கும், நெஞ்சு வளத்துக்கும், சிந்தை திறத்துக்கும் ஏற்ப; இந்தக் காயந்திரி மந்தரத்தை நாற்பத்தெட்டு முறை முதல் எத்தனை முறை வேண்டுமானாலும் ஓதிப் பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை, முத்திநிலை... முதலியவைகளில் தேர்ச்சியும் முதிர்ச்சியும் அடையலாம். மற்ற விளக்கம் குருவழிக் காண்க.**

## திங்கள் காயந்திரி மந்திரம்

**நிலவே! தண்ணிலவே! பால்நிலவே! வெண்ணிலவே!**
**நீலண்டனோடு தழைத்தெழுவாயாக! சுவை பயப்பாயாக! நலம் நல்குவாயாக!**
**நீயே ஈசுவரனோடெழுக! சர்வேசுவரனோடெழுக! பரமேசுவரனோடெழுக!**
**மகேசுவரனோடெழுக! ஆதிசுவரனோடெழுக! அனாதீசுவரனோடெழுக!**
**தாயனையாய் சேய்களைக் காத்திடுக! அமுதவொளி யருளுக!**
**முழுநலம் வழங்குக! தொழுகிறோமுனையே!**
**மாயச்சூது, கேது இராகு, செவ்வாயொடு ஏயவினைகள்,**

நாள்கோள்மீன் தீய பாதிப்புகளகற்றுக! வானின் கிழவ!
அனாதியாதி பாதிமீதி யுகங்களில் வடிவுபல பெற்ற மதியே!
அருள்நிதியே! அனைத்தும் பேணுவாயாக!
ஊதா வண்ணத்தானே! போதாக் காலமும் தீதுதரு ஓதமும் நீக்கித்
தோதான ஆக்கம் தந்தருள்வாயே! நீயே!
வாழ்த்துகிறோமுனை! வணங்குகிறோமுனை! தொழுகிறோமுனை!
கும்பிடுகிறோமுனை! ஏற்றுப் போற்றிப் பேணிடுக எங்களை
திங்களங்கிழவனே! எங்கள் குலக் காவலனாகிடுக நீ! பக்கங்கள்
போக்கி அங்கங்களனைத்தும் காத்திடுக நீ! எங்கும் நிறைந்திடு
நிலவே! நீ இறையாய்! இயவுளாய்! அத்தாவாய்! எல்லாவாய்!
தெய்வமாய்! கடவுளாய் ஆட்சி புரிந்திடுக! வானக்கிழவனே!
வல்லவனே! வையத்து நல்லன செழிக்க அருளாட்சி செய்திடு நீ!
சச்சிதானந்தச் சுடரே! அருட்சோதியே! பேரோளியே! ஐந்தீக்
கொழுஞ்சுடரே! நிறையிறையே! நாமாகுக! நலமாகுக!

குறிப்பு : இந்தத் திங்கள் காயந்திரி மந்திரம் தனிமனிதர் தவத்திலாழ்ந்து அருளூற்றாகிடப் பேருதவி புரியும். தலையில் அமுத ஊற்று அருவியெனத் தோன்றப் பேருதவி புரிவது இம்மந்திரமே. ஆனால் குருவால் இட்டும் தொட்டும் கட்டியும் அருளப் பெற்றவரே முழுமையான பயன் பெறலாம். அருட்கலைக் கடந்திடக் குருவருளே நாவாயாகும்.

- குருபாரம்பரியம்

## வெள்ளி காயந்திரி மந்தரம்



ஓம் வெண்மை நிறத்தோனே! நாமாகுக! நமக!
பட்டாடை, வைரம் விரும்பி அணிவோனே! தழைத்தெழுநீ!
தீமைகள் அகற்றிடுக! நன்மைகள் அளிந்திடுக!
ஓம் அசுரகுருவே! நாமாகுக! நமக!
ஓம் சுக்கிராச்சாரியரே! நாமாகுக! நமக!
ஓம் அசுரகுருவே! காத்தருளுக!
செத்தாரை எழுப்பும் வல்லமை பெற்ற குருவே! காப்பாயாகுக!
இலக்குமியின் பார்வை உடையோனே!
தழைத்தெழுநீ! பயனாகுகநீ! சுவையாகுகநீ!

## இராகு காயந்திரி மந்தரம்



ஓம் ராகுவே நாமாகுக! நமக!
சர்ப்பப்பாதிப்பு அகற்றிடுக!
அனைத்தையும் கொடுக்க வல்லவனே!

வையகம் வாழ தழைத்தெழுநீ!
மனிதத்தலை சர்ப்பப்பாகம் கொண்டவனே!
துதிக்கிறோம் உனையே அறணாகுக!
நங்! மங்! சிங்! வாங்! யங்!
நசிநசி! மசிமசி! சிவசிவ! வசிவசி!
நசிநசி! மசிமசி! சிவசிவ! வசிவசி!

## கேது காயந்திரி மந்தரம்



ஓம் ஞானாதிபதியே கேதுவே
வணங்குகின்றோம் தழைத்தெழுவீராகுக!
ஞானம் வழங்கு பீடமே! தழைத்தெழுநீ!
நல்வழிகாட்டிடுக பேரின்பம் வழங்கிடுக!
வணங்குகிறோம் உனையே காத்திடுக!
நங்! மங்! சிங்! வாங்! யங்!
சர்ப்பப்பாதிப்பு விலக்கிடுக!

## அருட்சினை மந்திறம்

பதினெண் சித்தர்கள் 'அருட்சினை மந்திறம்' அருள் + சினையாகும் - அருள் கருவாகி வளர்ந்து பயன்தரக்கூடிய மந்திறம் என்று குறிப்பது இம்மந்திறம்.

ஓம் பராசத்தி நமசிவாய போற்றி!
ஓம் சித்தர்களே போற்றி!
ஓம் அருவ உருவ அருவுருவச் சித்தியாளர்களே போற்றி!

வானாகி! மண்ணாகி! வளியாகி! ஒளியாகி!
ஊனாகி! உயிராகி! உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானிகி நின்றாயே உனை வாழ்த்தி வணங்குகிறேன்.
ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு
நானாகிய அடியேன் நலம் வேண்டுகிறேன்
தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணாகி விலகியோடி ஒழியட்டும்.

ஓம் நசிநசி! ஓம் நசிநசி! ஓம் நசிநசி! ஓம் நசிநசி!
ஓம் மசிமசி! ஓம் மசிமசி! ஓம் மசிமசி! ஓம் மசிமசி!
ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி
ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ!

ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி!
ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா!

ஓம் அம்மையப்பனே போற்றி!
ஓம் அருட்குருவே போற்றி!
ஓம் அன்புறு ஊள்றே போற்றி!
ஓம் இன்பச்சோலையே போற்றி!
ஓம் சித்திச் சாலையே போற்றி!
ஓம் முதி மன்றே போற்றி!

கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்
பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் என ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனைத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழத்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம் விளைக! நலம் விளைக! நலம் விளைக!
நான்மறையே, நான்முறையே, நானெறியே, நான் வேதமே
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

பதினெண் சித்தர்கள் கருவறை உயிர்ப்பு, குடமுழுக்கு, பூசாவிதி, பூசாமுறை, குருமார் ஒழுக்கம், ஆகமம், மீமாட்சை, வேள்விமுறை, தவமுறை, ஞானமுறை, சித்திமுறை, ஓகமுறை, ஒளிவில் ஒடுக்ககம், முதலிய நூல்களில் எல்லாரும் பயன்படுத்தித் திருவருட்பேறு பெறும் மந்திறம் என்று இம்மந்திறத்தைக் குறிக்கின்றார்கள். சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், அனைவரும் இம்மந்திறத்தை அன்றாடம் பூசையில் பயன்படுத்துமாறு திருமந்திர ஓலை நாயகம் ஓலை விடுக்குமாறு ஆணையிடப்படுகின்றார். இம்மந்திரம் கருவறைகளையும், வெட்டவெளிக் கருவறைகளையும், வழிபாட்டு நிலையக்கருவறைகளையும், தனிமனித உள்ளங்களையும்; இல்லங்களையும் உயிர்ப்பிக்கும்.

## பூசை முடிவில் சொல்ல வேண்டிய மந்திரம்

1. ஓம் அருட்கலைகள் நாமாகுக!
2. ஓம் ஆயக்கலைகள் நாமாகுக!
3. ஓம் கடவுட்கலைகள் நாமாகுக!
4. ஓம் தெய்வீகக் கலைகள் நாமாகுக!
5. ஓம் பேய்க்கலைகள் நாமாகுக!
6. ஓம் நோய்க்கலைகள் நாமாகுக!
7. ஓம் தேய்கலைகள் நாமாகுக!

8. ஓம் நான்மறைகள் நாமாகுக!
9. ஓம் நான்முறைகள் நாமாகுக!
10. ஓம் நான்நெறிகள் நாமாகுக!
11. ஓம் நான்வேதங்கள் நாமாகுக!
12. ஓம் ஞானங்கள் நாமாகுக!

**ஓம் திருசிற்றம்பலம் ஓம்!**

## சித்தர் அரசயோகிக் கருவூறார் அறக்கட்டளையின் செயல் திட்டங்கள் மற்றும் அருள் வழங்கள்

1. பதினெண் சித்தர்கள் கலைகள் மற்றும் இலக்கியங்கள் அச்சிடுதல்.

2. தனி மனிதர்களுக்கு ஏற்படும் உலகியல் கடந்த பாதிப்புக்கள், திருமணத் தடை, தொழில் வியாழத் தடைகள், நாகபாதிப்பு, கிரகப் பாதிப்புக்கள் மற்றும் மந்திரவாதிப் பாதிப்புகளுக்கு பதினெண் சித்தர்களின் முறைப்படி அருட்கணிப்பு செய்து நலம் வழங்குதல்.

3. பதினெண் சித்தர்களின் முறைப்படி இல்லங்கள் மற்றும் தொழிற்கூடங்களுக்குத் தமிழ் மொழியில் கணபதி ஓமம், சண்டி ஓமம், பெருமாள் வேள்வி, சுதர்சன ஓமம், நவக்கிரக வேள்வி, மகா இலக்குமி யாகம், ஆஞ்சநேயர் யக்ஞம் செய்து தருதல்.

4. பதினெண் சித்தர்களின் முறைப்படி திருமணம் செய்து வைத்தல் மற்றும் கோயில் குடமுழுக்கு, கோயில் புத்துயிர்ப்பு செய்தல்.

5. அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஆர்வமுள்ளவர்களுக்கு அருட்கணிப்பு செய்ய, மந்திரிக்கக் கற்றுக் கொடுத்தல், மேலும் அருள்வாக்கு, ஞானக்காட்சி... போன்ற கலைகளைக் கற்றுக் கொடுத்தல்.

6. பதினெண் சித்தர்கள் வழங்கிய மெய்யான இந்து முறைப்படி தனி மனிதர் அன்றாடம் வீட்டில் பூசை மொழிகளைக் கூறி பூசை செய்யும் முறை மற்றும் கோயில் வழிபடும் முறை மற்றும் கோயிலில் பிறர் உதவியின்றி ஒவ்வொருவரும் தமிழ்மொழி மந்திரங்களை ஓதி அருட்சினை செய்து கொள்ளும் முறை, தமிழ்மொழி மந்திரங்களைக் கூறி குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராம தேவர்- தேவதைகள், நாட்டுக் கடவுள்கள் மற்றும் விருப்ப தெய்வங்களைப் பூசை செய்யக் கற்றுக் கொடுத்தல்.

7. அரசமர வழிபாடு, பிரதோச வழிபாடு, சிவராத்திரி வழிபாடு, அமாவாசை வீரதவம் (விதம்), மூன்றாம் பிறைப் பூசை, பௌர்ணமி முழு நிலவு நாள் பூசை, திருவிளக்கு பூசை, கலச பூசை, மாலை வழிபாட்டுச் சாத்திரம் (சந்தியா வந்தனம்), மற்றும் முக்கிய திருநாட்கள் பற்றிய விபரங்களும் அத்திருநாட்களில் செய்யவேண்டிய பூசை முறைகளையும் பயிற்றுவித்தல்.

## பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம் (ஒன்பது கோள்கள் பற்றிய உண்மைகள்)


| கிரகம்/கோள் | தானியம் | எண்ணை | பருப்பு | கல் | வண்ணம் | பூ | பயன் |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு சூரியன் | மூங்கிலரிசி | உயிரினக்கொழுப்பு எண்ணை | அவரை | வைரம் பல வண்ணம் | பால் போன்ற வெண்மை பலவண்ண ஒலி | வெண்ணிற பூ | ஆன்மா, முன்னோர் நலம், பொலிவு, செயல் வெற்றி |
| திங்கள் சந்திரன் | பச்சரிசி | தேங்காய் எண்ணை | துவரை | முத்து | ஊதா மந்த வெண்மை | ஊதா வண்ணப்பூ | தாய் நலம், அறிவு, யோகம், சிறப்புறல் |
| செவ்வாய் அங்காரகன் | சோளம் | கடலை எண்ணை | மொச்சை | பவளம் | குருதிச் சிவப்பு | சிவப்புப் பூ | உடன் பிறந்தார் நலம், நிலபுலன், துணி, வீரம் |
| புதன் | கம்பு | புங்க எண்ணை | தட்டைப்பயறு | பச்சை | கரும்பச்சை | பச்சை வண்ணப்பூ | கலை, உறவு, பெண், அறிவு |
| வியாழன் குரு | தினை | நெய் | உளுந்து | கோமேதகம் | மஞ்சள் | மஞ்சள் பூ | புகழ், செல்வம், கல்வி, வாரிசு, உடல் நலம் |
| வெள்ளி சுக்கிரன் | குதிரை வல்லி | இலுப்பெண்ணை | வேர்க்கடலை | மாணிக்கம் | இளஞ்சிவப்பு | இளஞ் சிவப்புப் பூ | மனைவி, அணிகலன், வாகனம், கரு |
| சனி | சாமை | நல்லெண்ணை | மூக்குக்கடலை | நீலம் | கருப்பு நீல வண்ணம் | கருப்புப் பூ கருங்குவளை பூ | ஆயுள், துணைவி, நண்பர், தரு |
| இராகு பெண் | கேழ்வரகு | வேப்பெண்ணை | கொள்ளு | புட்பராகம் பூவோசை | வெளிர் ஊதா | வெளிர் ஊதாப்பூ | ஞானம், பேரின்பம், குரு |
| கேது ஆண் | கோதுமை | ஆமணக்கு எண்ணை (விளக்கெண்ணை) | பாசிப்பயறு | வைடூரியம் கெம்பு | இளங் கருப்பு | இளங் கருப்புப் பூ சித்தகத்தி பூ | தொழில், திரு ஞான யோகம் |

**தும்பை, அருளி(அரளி), மருக்கொழுந்து, மல்லி, முல்லை, தாமரை, அல்லி, நீலம், தவனம், செண்பகம், வேங்கை, வாகை, அவரை, ஆவாரை, (அருகு, துளசி, வில்வம்) காந்தல், நந்தியாவட்டை, சங்கு, தாழம்பு (மிகச்சிறப்பற்றது) கொன்றை பன்னீர் முதலியவை பொதுவாக பூசையில் பயன்படுபவை தாழம்பூவை பூசையில் பயன்படுத்தாமல் செய்தது, ஆசிரியச் சூழ்ச்சியே! இவைகள் சித்திக்குரியன.**

## தவமும் கல்வியும் பிறர்தர வாரா!

**பத்தியும் முத்தியும் அவரவர் முயற்சியின் பயனே!**
**தன்னையறியும் அறிவே மெய்யறிவு பின்னையறிவு பேயறிவு**
**உனக்குத் தெரியவில்லை, புரியவில்லை என்பதற்காக எதையும் மறுக்காதே, வெறுக்காதே!**
**எதையும் ஆராய்ந்து அறிந்து தெரிந்து புரிந்து உணர்ந்து செயற்படு!**

## நல்ல உள்ளம் வெல்வது உறுதி!



**ஓம் பேரருள்மிகு குருதேவர் பன்னிரண்டாவது பதினெண் சித்தர்**
**பீடாதிபதி, மடாதிபதி, இந்துமதத் தந்தை, தத்துவ நாயகம்,**
**அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசக்திகள் சன்னிதானம்,**
**குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர்**

## ஐயா அரசயோகிக் கருவூறார்

**சித்தர் அரசயோகி கருவூறார் அறக்கட்டளை**
**பதிவு எண் : 865/2011**
**தருகுலம், சித்தர் நகர், வேம்படி தாளம், சேலம் மாவட்டம்**